ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39] ரௌத்திரி ஆண்டு ஆவணித்திங்கள் 10—9—80 [இதழ் 1

ஸ்ரீ மேதாதட்சிணாமூர்த்தி

-: குருபெயர்ச்சி :-

19—9—80 வெள்ளிக்கிழமை

★

திருக்கயிலாயபரம்பரைத்
தருமையாதீனத்திற்குச்
சொந்தமான

உத்தரமாயூரம்

வள்ளலார்கோயில்

**ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி
தேவஸ்தானத்தில்**

ஸ்ரீ மேதா தட்சிணாமூர்த்திக்கு

28—8—80 வியாழக்கிழமை முதல்

லட்சார்ச்சனையும்

அபிஷேக ஆராதனையும்

நடைபெறுகின்றன.

'கல்லால் நீழல் அல்லாத் தேவை
நல்லார்பேணார் அல்லோம்நாமே'

— திருஞானசம்பந்தர்

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

பேரன்பன் அல்லன்
  பிழைசெய்யான் தானல்லன்
ஓரன்பும் இல்லா
  உலுத்தனேன் — பேரன்பு
காட்டிஎனைக் காட்டியுனைக்
  காட்டியின்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 68

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 || 10—9—80 || இதழ் 10

உட்பொருள்

எண்		பக்கம்
1	பதின்றும் பெறுவோம்	433
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	437
3	“கல்லூர்ப் பெருமணம்வேண்டா”	444
4	அன்னையருள்மாலை	448,452
5	கங்கை கரந்தார் ...	449
6	திருப்பேணுபெருந்துறை, திருநறையூர்ச்சித்தீச்சரம் தலச் சிறப்பு ...	453
7	அபிராமி அந்தாதி ...	459
8	சைவ சிகாமணி ...	465
9	ஒரு விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு ...	467
10	ஆவணிமூல விழாக் கடிதங்களுள் சில ...	469
11	நிறைபணி விழா ...	471
12	செய்திகள் ...	473
13	எதிர்காலம் ...	475

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி - ஆவணி - 10—9—80 | இதழ் 10

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பதினாறும் பெறுவோம்

நினைப்பதல்ல; வேறு:

'அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்; இரண்டுக்குப் பிறகு எப்போதும வேண்டாம் - என்று அரசே வேண்டுகோள் விடுக்கும் இக்காலத்தில் 'பதினாறும் பெறுவோம்' என்ற இத் தலைப்புப் பலருக்கு வியப்பாகக்கூடத் தோன்றும். 'பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என நம் முன்னோர் ஆசீர்வாதமாகக் கூறுவது வழக்கம். ஒரு காலத்தில் இவ்வாழ்த்தின் உண்மை தெரியாது பலர் பதினாறு குழந்தைகளைப் பெறுவதாக எண்ணி மயங்கினர். இச்சொல்லின் உண்மை உணர்ந்தோர், இளமை, அழகு, புகழ் முதலாகிய வாழ்வுக்கு இன்றியமையாத பேறுகளையே சான்றோர்கள் ஆசீர்வாதமாக உரைத்துள்ளார் என அறிவர். இங்கே நாம் 'பதினாறும் பெறுவோம்' எனக் குறித்திருப்பது மேற்கூறிய இரண்டையும் பற்றியது அல்ல.

மரங்களா ? மாதேவனா ?

உடலும், உயிரும் இணைந்து நிற்றலே மனித வாழ்க்கை. உணவும், நீரும்போல் நாம் சுவாசிக்கும் காற்றும் உயிர்வாழ இன்றியமையாதது எனப்பலரும் அறிவோம். நாம் உள்ளே இழுக்கும் காற்றுப் பிராணவாயு எனப்படும். நாம் வெளியேவிடும் காற்று கரிமிலவாயு எனப்படும். நாம் உள்ளே சுவாசிக்கும் காற்றில் பிராணவாயுவின் அளவு குறைந்தால் மூச்சுத்திணறி நாம் இறக்கநேரிடும். கோடிக் கணக்கான மக்கள் வெளிவிடும் கரிமிலவாயுவால் காற்று மண்டலம் நிறைந்துவிடுமானால், நாம் உள்ளே சுவாசிக்கப் பிராணவாயு எப்படிக் கிடைக்கும்? உயிர்களின் பிழைகளையும் தவறுகளையும் தான் ஏற்றுக் கொண்டு. அவற்றிற்கு நன்மையையே வழங்கும் இறைவனது கருணையைப்போல், இக்கரிமிலவாயுவாகிய தீய காற்றைத் தாம் ஏற்றுக் கொண்டு மனித இனத்தின் சுவாசத்திற்கு இன்றியமையாத பிராண வாயுவினை வழங்கும் பெருஞ்செயலைச் செய்வன மரங்கள். இவற்றிற்கு இத்தன்மையை இறைவன் வழங்கியிருக்கிறான்.

சமய நெறியில் விஞ்ஞானம் :

தமிழகத்தில் மரங்கள் அடுப்பெரிக்க எரிபொருளாகவும்,கட்டடங் களுக்கு உத்திரங்களாகவும், சாத்துக்களாகவும் பயன்படுவதோடு மட்டும் நிற்பதில்லை. இன்றைய விஞ்ஞான உண்மைகளை எல்லாம் தெய்விகக் கோட்பாடுகளில் அடக்கி உணர்த்திய நம் முன்னோர்கள் மரங்களின் பயன்பாடுணர்ந்து அவற்றிற்குத் தெய்வத்தன்மை கூட் டிப்போற்றியுள்ளனர். வேம்பினையும் அரசினையும் ஒன்றாகவளர்த்து வணங்கி வழிபட்டனர். திருக்கோயில்தோறும் வில்வம், வேம்பு, மா, பலா, பாதிரி போன்ற பல்வேறு மரங்களைத் தலவிருட்சங்களாக அமைத்து மரங்களைப் பாதுகாக்க வழிகோலினர். தலவிருட்சங்களை வெறும் மரங்களாகக் கருதாது தெய்வங்களாகவே வலம்வந்து வழி பட்டுப் பேறுபெற்றனர். வேம்பு, அரசுபோன்ற மரங்களை அடுப் பெரிக்கக்கூட உபயோகித்தல் கூடாது எனச் சம்பிரதாயத்தின் பெயரால் மரங்களை வாழவைத்தனர்.

தன்னலமும் சமூகநலமும் :

ஒரு மனிதன் ஒருநாள் சுவாசிக்க, அவனுக்குத் தேவையான பிராணவாயுவைப் பெறவேண்டுமானால், பதினாறு மரங்கள் தேவை என்றும், அவை வானமண்டலத்தில் நிரம்பியிருக்கும் கரிமிலவாயு வைத் தாம் உணவாகக்கொண்டு, பிராணவாயுவை வெளியிடு கின்றன என்றும் விஞ்ஞானிகள் அறிவு பூர்வமாகக்கண்டு விளக்கி யுள்ளனர். ஒரு மனிதன் உயிர்வாழப் பதினாறு மரங்களின் துணை

வேண்டுமென்றால், சமூகநலங்கருதி இல்லாவிட்டாலும், தன்னலத்தின் அடிப்படையிலாவது ஒவ்வொருவரும் பதினாறு மரங்களைத் தம் வாழ்நாளில் நட்டுவளர்த்து ஆளாக்கவேண்டுவது இன்றியமையாக் கடமையாகிறது. மனிதக் குழந்தைகளைப் பிள்ளை என்போம். அது போல் மரத்தின் கன்றுகளையும் பிள்ளை எனக் கூறும் வழக்குண்டு. தென்னம்பிள்ளை, பாக்குப்பிள்ளைபோல்வன அவை. எனவே ஒவ்வொருவரும் குறைந்தது பதினாறு பிள்ளைகளையாவது பெற்று வளர்த்தால்தான் - நாம் உயிர் பெற முடியும் - வாழ்வு பெற முடியும் என்பதைத்தான் 'பதினாறும் பெறுவோம்' என மேலே குறிப்பிட்டோம். பதினாறும் என்ற முற்றும்மையால் ஒன்று குறையினும் தீதாம் என்பதை வலியுறுத்துகிறோம்.

மரங்களின்வழி மனிதர்க்கு அறிவுரை :

மரங்களின் சிறப்பினை உணர்ந்த நம்முன்னோர் மனித இனத்திற்கு அறிவுரைகூற மரங்களை மேற்கோள்காட்டினர். 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று'. 'மருந்தாகித் தப்பா மரத்தற்று' எனத் திருவள்ளுவரும். 'சிதலைதினைப்பட்ட ஆலமரத்தை மதலையாய் மற்றதன் வீழ் ஊன்றியாங்கு' என நாலடியாரும், 'தளரா வளர்தெங்கு தாளுண்டநீரைத் தலையாலே தான் தருதலான்' என ஔவையாரும் பலவாறு போற்றுதலைக் காணலாம். மரங்களை மேற்கோள் காட்டித் தமிழ் இலக்கண - இலக்கியங்கள் கூறிக்காட்டும் வாழ்வியல் படிப்பினைகள் எண்ணில.

கா வளர்ப்பது கடமை :

மரம் வளர்த்துப் போற்றுவது சமூகத்திற்கு நாம் செய்யும் தலையாய கடமைகளுள் ஒன்று. வாழ்க்கை நிலையாமை உடையது என்று கருதிப் பெருஞ் செல்வத்தைத் துறந்தகாலத்தும், அப்பரடிகள் எப்படி அதனைத் துறந்தார் என்பதைக் கூறவந்த சேக்கிழார் பெருமான், தமது பொருளை,

'காவளர்த்தும் குளந்தொட்டும்'

செலவு செய்தார் என்பார். அப்பூதி அடிகளும் இவ்வாறு சோலைகளை உருவாக்கிய செய்தி பெரியபுராணத்தில் உண்டு. ஆறு, குளம், ஏரி இவற்றின் கரைகளில், கரைகளின் வலிமைக்கு உதவியாக நின்று பாதுகாக்கும் மரங்களை வாழ்நாளில் எல்லோரும் நட்டு வளர்க்கும் கடமை உடையவர்கள். அசோகர் காலந்தொடங்கிச் சாலையோரங்களில் பயன் தரும் நிழல் மரங்களைநட்டுப் பாதுகாக்கும் பழக்கம் இந்நாட்டில் வளர்ந்து வந்திருப்பது நினைவுகூரத்தக்கது.

வளர்க்காவிட்டாலும் வெட்டாதீர் :

அரசு, வனத்துறை மூலம் மரங்களை நட்டுப் பாதுகாக்கின்றது. அரசுமட்டுமே செய்துமுடிக்கத்தக்க செயலன்று மரம் வளர்த்தல். நம்முடைய உயிர்ப்புக்கு உறுதுணையாவன மரங்கள் என்பதை உணரும் ஒவ்வொருவரும் இல்லத்தோட்டத்திலும், சாலைகளிலும், பொது இடங்களிலும் மரங்களை நட்டு வளர்க்க இயன்றவாறெல்லாம் பாடுபட வேண்டும். வனமகோற்சவம் செய்துவிட்டு மறுநாளே ஆட்டை விட்டு மேய்ப்பதில் என்ன பயன் ? 'ஏரினும் நன்றால் எருவிடுதல் மற்றதன் நீரினும் நன்றதன் காப்பு' என்ற குறள்நெறியில் நட்ட மரங்கள் நலியாது வளரத்தக்க பாதுகாப்பினை வழங்கும் பொறுப்பு நம்மில் அனைவருக்கும் உரியது. 'நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்பதற்கு இணங்க, நட்டுவளர்க்க இயலாதவர்கள், வளர்ந்திருக்கும் மரங்களையாவது வெட்டாது பாதுகாத்து நிற்றல் வேண்டடத்தக்கது.

உறுதிபூண்போம் :

வாழ்வா சாவா என்ற நிலைமைக்கு மிக விரைவாக நமது காற்று மண்டலம் தூய்மை கெட்டுவருவது நம்மில் பலருக்குத் தெரியாது. ஆலைப்புகைகளும், கழிவுகளும், மோட்டார்வாகனங்களும் வெளியிடும் அழுக்குகளால் முன்னரே கெட்டுப்போயிருக்கும் காற்றுமண்டலம் தூய்மை பெற்று, நாம் நல்லகாற்றினைச் சுவாசித்து நீண்ட நாள் உயிர் வாழ மரம் நடுவோம், காப்போம் என உறுதிபூண்டு செயல்படுவோமாக.

'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்'
'நாட்டுக்குப் பெருநலஞ் சேர்ப்போம்'

ஆனந்த நடராசப்பெருமான் 6 அபிடேக நாட்கள்

சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்திரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் - பத்திவளர்
மாசிஅரி கன்னி மருவுசதுர்த் தசிமன்று
ஈசர்அபி டேகதின மாம்.

சித்திரை - திருவோணம், ஆனி - உத்திரம், ஆவணி - சதுர்த்தசி, புரட்டாசி - சதுர்த்தசி, மாசி - சதுர்த்தசி, மார்கழி - திருவாதிரை

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரியில்

தென்முகப்பரமனுக்கு வெள்ளிக் கவசம் அணிவித்தும்,
வெள்ளிவிழா அரங்கைத் திறந்துவைத்தும்,
கண்காட்சியைத் தொடங்கிவைத்தும்

வழங்கியருளிய

ஆசியுரை

29—8—1980

"கரவின்றி நன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரமொன்றிய செஞ்சடையான் வாழ்
வரமா மயிலாடுதுறையே."

எல்லாம் இறைசெயலே!

அன்பநாதபுரம்வகையார் அறத்துறைக்கல்லூரியின் வெள்ளிவிழா இன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற இருக்கிறது. வெள்ளி விழா நிகழ்ச்சிகள் வெள்ளிக்கிழமையில் தொடங்கி அடுத்த வெள்ளிக் கிழமை முடிய நடைபெறுவது மகிழ்ச்சிக்கு உரியது. தெய்விகம் வாய்ந்தது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இக்கல்லூரி தொடங்கியது ஜூன் 29-ந்தேதி. ஆனால் வெள்ளிவிழா தொடங்கும் இன்றைய தேதியும் 29 ஆக அமையும் என்று யாரும் எதிர்பார்க்க வில்லை இறைவன் அருளால் இதுபோன்று ஒவ்வொருவர் வாழ்க்கை யிலும் எதிர்பாராத பொருத்தங்கள்வந்து அமைவதுண்டு. இவை யெல்லாம் இறைவன் கட்டளைப்படியே அமைபவை. அதனால்தான் 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று தாயுமானூரும், 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என்று அப்பரடிகளும் அருளிப்போந்தனர். இங்ஙனம் அனுபவபூர்வமான ஆன்றோர்களின் வாக்கியங்களை அவரவர் அனுபவங்களில் வைத்துத்தான் புரிந்து கொள்ளமுடியும்.

கடவுளை முன்வைத்துக் காரியம் செய்க :

இன்று இக்கல்லூரியின் நுழைவாயிலில் அமைந்துள்ள தென்முகக்கடவுளுக்கு ஆசிரியர் மாணுக்கர்களின் காணிக்கையாக வெள்ளிக்கவசம் சார்த்தி வழிபாடு செய்து இவ்வெள்ளிவிழா நிகழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளீர்கள். வெள்ளிக்கிழமையில் தென்முகப்பரமனுக்கு வெள்ளிக்கவசம் அணிவித்து, வெள்ளிவிழாவைத் தொடங்கியிருப்பது இக்கல்லூரிக்கே உரிய தனிச்சிறப்பாகும். எச்செயலையும் கடவுளை முன்வைத்தே தொடங்குவது முன்னோர்களின் வழக்கம். அங்ஙனம் தொடங்கின் நிகழ்ச்சியில் குறைவோ தடங்கலோ நிகழா என்பது அவர்களின் நம்பிக்கை. அங்ஙனமே இங்கும் தொடங்கியிருப்பது பாராட்டக்கூடியது.

ஆறுமுகனுய் அமைந்த கல்லூரி :

இக்கல்லூரியை அன்பநாதபுரம், ஏனுதிமங்கலம், கங்கணம்புத்தூர், காருகுடி, பல்லவராயன்பேட்டை ஆகிய ஐந்து ஊர்களில் வாழ்ந்துவரும் காராளப் பெருமக்கள் சேர்ந்து தொடங்கினுர்கள். அன்னசத்திரங்கள் ஆயிரம்வைப்பதைவிட — ஆலயம் பதினுயிரம் அமைப்பதைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உயர்ந்தது எனும் பாரதியாரின் கருத்திற்கிணங்க இவர்கள் இக்கல்லூரியினை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினுர்கள். தொடங்குவதை ஒரு அருளாளர் திருக்கரத்தால் தொடங்கவேண்டுமென்று திண்ணமாக எண்ணினுர்கள். எண்ணிய எண்ணியாங்கு எய்தப்பெற்றுர்கள். நமது கயிலைக் குருமணியின் திருக்கரத்தால் ஒளிவளர் விளக்கேற்றிக் கல்லூரி தொடங்கப்பெற்றது.

இதனுல் அன்னசத்திரம் அமைப்பதிலோ ஆலயங்கள் கட்டுவதிலோ பாரதியாருக்குக் கருத்துவேறுபாடு இருப்பதாகக் கொள்ளக்கூடாது. மக்கள் அறியாமையில் மூழ்கிக்கிடக்கும்பொழுது அன்னசத்திரங்களையும் ஆலயங்களையும் அமைத்தால் மக்கள் தம் அறியாமையினுல் அவைகளைச் சரிவர நிர்வகிக்கமாட்டார்கள்; இடித்துப் பாழ்படுத்திவிடுவார்கள் ; ஆதலின் ஆங்காங்கே பள்ளிக்கூடங்களை வைத்து அவர்களை அறியாமையினின்றும் நீக்கி, நல்லறிவினைப் புகட்டிவிட்டால் தாங்களே முன்வந்து ஒவ்வொரு ஆலயத்தையும் அன்னசத்திரத்தையும் கட்டிவிடுவார்கள் என்ற கருத்தில்தான் பாரதியார்,

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினுயிரம் நாட்டல்

பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் ''

என்று கூறினர். இக்கருத்தினை வலியுறுத்துவதற்குப் பாரதியார் பிறிதோரிடத்தில் கூறிய "பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்கு வோம்" என்ற வாக்கும் துணைசெய்கிறது. இந்த நல்ல கருத்தில் தான் அன்பநாதபுரம்வகை அறத்துறையினர் இக்கல்லூரியினை அமைத்தார்கள்.

பொதுவாக எந்தச்செயலும், எந்தநிறுவனமும் நல்ல எண்ணத் தோடு தொடங்கப்பெற்ருல் அது மென்மேலும் வளர்ந்து ஓங்கும். இன்றிருக்கும் கலைக்கல்லூரிகளில் சிறந்த கல்லூரிகளுள் ஒன்ருக இந்த ஏ. வி. சி. கல்லூரியும் திகழ்வதற்கு அமைத்தவர்களின் அழுத்தமான நல்லெண்ணமும், தொடங்கிவைத்தவர்களின் அரு ளாசியுமே காரணங்களாகும். இவைமட்டுமல்லாமல் இக்கல்லூரி இந்த அளவுக்கு வளர்ந்துவந்தமைக்கு இன்னுமொரு காரணமும் உண்டு ஐந்து ஊர்களில் வாழ்ந்தவர்களின் பொருள்வளம் நல்லெண் ணங்களுடன் மாயூரநாதப்பெருமானின் அருள்கொழிக்கும் வளமான இடத்தில் இக்கல்லூரி அமைந்துள்ளதும் ஒரு முக்கியகாரணமாகும். இங்ஙனம் ஐந்து ஊரும் ஐந்துமுகமாக இருக்கவும், அதோமுகமாக மாயூரநாதரின் மன்னன்பந்தல் நிலம் விளங்கவும் அறுமுகனுக இக்கல்லூரி காட்சிதருகிறது.

குருவை அணுகிக் குறையை நீக்கு !

இக்கல்லூரியின் நுழைவாயிலில் திருக்கோயில்கொண்டுள்ள தென்முகக்கடவுளின் திருவுருவ அமைப்பில் ஒரு தத்துவம் அமைந் துள்ளது. கடவுளின் தத்துவத்தை நல்ல குருநாதரை அணுகிப் புரிந்துகொள்ளவேண்டும். அங்ஙனமின்றிப் பார்த்தமாத்திரத்தில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே என்று ஒருவன் கூறுவானே யானல் அது அவனது அறியாமையையே காட்டும். உதாரணமாக, இக்கல்லூரியில் வரலாறு, பொருளாதாரம், கணிதம், விஞ்ஞானம், உயிரியல் போன்ற பல்வேறு பாடங்களைக் கற்றுத்தருகின்றார்கள். யாரேனும் ஒருவர்வந்து இக்கட்டடங்களின்முன் நின்றுகொண்டு "இக்கல்லூரியில் என்ன என்னவோ கற்றுக்கொடுக்கிருர்கள் என்ருர் களே! ஒன்றும் காணேமே!" என்று கூறினல் அது அவரின் அறியாமையைத்தானே புலப்படுத்தும். அந்தமனிதர் இக்கல்லூரியில் சேரும் தகுதியுடன் வந்து, முறையாகப் பணம் கட்டிச் சேர்ந்து, தவருமல் வகுப்புக்களுக்குவந்து, ஆசிரியர்கள் சொல்வனவற்றைக்

கவனமுடன் கேட்டுப் பயின்றால் எந்தத்துறையும் எளிதில் கைவரும். அதுபோலவே ஆண்டவனது தத்துவமும் முன்னோர்களின் அனுபவ வார்த்தைகள் எனும் துணையைக்கொண்டு நல்ல குருநாதரை அணுகி அவரின் சொற்படி நடந்துவந்தால் தெளிவாக விளங்குவதோடு அவனது இன்னருளும் கிடைக்கும்.

பாவனையில் விளக்கிய பரமன் அருள் !

இனித் தென்முகக்கடவுளின் திருவுருவத்தில் அமைந்துள்ள தத்துவத்தைக் காண்போம். அவரின் திருவடியால் அழுத்தப்பட்டுள்ள வடிவம், முயலகன் எனும் அறியாமையின் வடிவம் ஆகும். அறியாமையை அழுத்தி அடக்கமுடியுமேதவிர அழிக்கமுடியாது. அவரின் திருமுன்னர் நான்கு முனிவர்கள் அமர்ந்துள்ளதைக் காணலாம். அவர்கள் நால்வேதம், ஆறங்கம், ஆகமம்போன்ற நூல்களைக் கற்றுக் கேட்டு உணர்ந்த சான்றோர்கள். அவர்கள்கேட்ட கேள்விக்கு இறைவன் அளித்த விடைதான் அப்பெருமான் காட்டும் வலக் கையின் அடையாளம் ஆகும். அந்த அடையாளத்தைச் சின் முத்திரை என்று கூறுவர். சித் என்பது அறிவு. முத்திரை என்பது அடையாளம். இறைவன் சொற்களாகக்கூறி விளக்காமல் பாவனையால் அம்முனிவர்களின் தகு திநோக்கி விளக்கியுள்ளான். இன்றும் அறிவுத்துறையில் மேல்வகுப்புக்குப் போகப்போகப் பேச்சுக்கள் குறைவதைக் காணலாம் அதுபோலத்தான் மெய்ஞ்ஞானத் துறையிலும் உயிர்வளரவளரச் சொற்கள் குறைந்து ஆன்ம அனுபூதி அதிகமாகும். இதனால்தான் “மோனம் என்பது ஞானவரம்பு” எனக் கூறப்படுகிறது.

கையில் காட்டிய பொய்யில்பொருள் !

இன்று சின்முத்திரைபற்றிச் சிறிது சிந்திக்கலாம். உலகிலுள்ள எந்த மனிதனுக்கும் கையின் அமைப்பில் மாற்றம் இல்லை சைவர்களுக்கு என்றில்லாமல் எந்தச் சமயத்தைச் சார்ந்தோர்க்கும் கையில் உள்ள விரல்கள் ஐந்தேயாகும். அந்தக் கையின் அமைப்பில் சைவ சித்தாந்தக் கருத்தினையே அமைத்து விளக்கியுள்ள சின்முத்திரைப் பாங்கினை எண்ணி எண்ணி வியக்கவேண்டியுள்ளது. கையிலுள்ள ஐந்து விரல்களிலும் முக்கியமானதும், அடக்கமானதும், தனித்து இருப்பதும், தன்னையின்றி எந்தச்செயலையும் பிறவிரல்கள் செய்ய இயலாதவகையில் முக்கியத்துவம் வாய்ந்ததுமாயிருப்பது கட்டை விரலாகும். ஆதலின் அது கடவுள் என்பதற்கு அடையாளமாகத் திகழ்கின்றது. எதற்கெடுத்தாலும் நான் என்று முந்திவருகின்ற ஆள்காட்டி விரல் என்று அழைக்கப்பெறும் சுட்டுவிரல் ஆன்மாவை உணர்த்தும். நான் என்னும் முனைப்பு ஆன்மாவிற்கு (சுட்டு விரலுக்கு) ஆணவத்தைச் சார்ந்திருப்பதால்வருவது. அடுத்துள்ள

பெரியவிரல் ஆணவத்தையும், அதற்கடுத்தவிரல் கன்மத்தையும், சுண்டுவிரல் மாயையையும் உணர்த்துகின்றன.

பார்வைக்குப் பெரியதாக இருந்து தலைநிமிர்ந்துநின்று உயிரைத் தன்வயப்படுத்தும் தன்மையால் நடுவிரல் ஆணவத்தைக் குறிக்கும் அடையாளமாயிற்று. அதற்கடுத்தவிரல் மோதிர விரல் என்று அழைக்கப்பெறும் கர்மாவைச்செய்வோர் பவித்திரம் அணிந்தே செய்வர். பவித்திரமே நாளடைவில் மோதிரமாயிற்று. ஆதலால் மோதிரவிரல் எனப் பெயர்பெற்றது. திருமணக்காலங்களில் மைத்துனன் முறையுள்ளவன் மாப்பிள்ளையின் கையில் மோதிரம் ஒன்று அணிவிப்பது இன்றும் வழக்கமாக உள்ளது. என்ன கருத்து எனின், "என் சகோதரியை இன்றிருந்து கர்மாக்களைச் செய்வதற்கு உனக்குத் துணையியாக்கிவிட்டேன்; அவளின் துணையைக்கொண்டு கர்மாக்களைச் செய்து உடல்பெற்ற பயனை அடைவாயாக!" என்பதாகும். ஆனால் இன்று அந்த மாப்பிள்ளையும் பதிலுக்கு மைத்துனனுக்கு ஒரு மோதிரத்தை அணிவித்துவிடுகின்றான்; இது காலப்போக்கில் மரியாதைபற்றிவந்ததாகவே தோன்றுகின்றது. அந்த மோதிரவிரலுக்கு அடுத்த விரல் மாயைக்கு அடையாளம் அந்தச் சுண்டு விரலுடன் திருமணநேரத்தில் மணப்பெண்ணின் சுண்டு விரலையும் சேர்த்துக்கோர்த்து அக்னியை வலம்வரச் செய்கின்றனர். அவளே (சுண்டுவிரல்) மாயை என்பதை உணர்த்தும் கருத்தில்தான் இந்த நிகழ்ச்சியும் அமைந்துள்ளது.

இங்ஙனம் ஆண்டவனின் அருளால் மாயையாம் துணைவியுடன் கன்மங்களைச் செய்யச்செய்ய ஆணவத்தின் வலிமை குறைய ஆரம்பிக்கும். கர்மம் என்பது செயல். கன்ம வளர்ச்சியினால் உயிரானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் விடுத்துப் பதியை அடையும் என்ற தத்துவத்தில்தான் சுட்டுவிரலின் நுனி கட்டைவிரலின் அடியில் தங்கும் அடையாளத்தைப் பெருமான் வைத்துக் காட்டியுள்ளார். இவ்வடையாளத்தைத்தான் சின் முத்திரை என்கிறோம். இவ்வரிய உண்மையை விளக்கும் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவம் மேல்நிலைக்கல்வி புகட்டும் இக்கலைக்கல்லூரியில் எழுந்தருளியிருப்பது மிகமிகப் பொருத்தமானதேயாகும்.

நல்லவனும் வல்லவனும் :

இத்தத்துவத்தின் அடிப்படையில் ஆன்மா பக்திநெறியில் நின்று பரமன் அருள்பெறவேண்டும். பக்தி எனும்பொழுது அசுர பக்திதான் முன்னேவருகிறது. அசுரர்கள் எந்தச்செயலிலும் தீவிரம் உடையவர்கள். அவர்கள் இறைவனை நோக்கித் தவம் செய்தாலும் அதிலும் அவர்களின் தீவிரம் புலப்படும். அதனால்தான் அசுரசாதனை

என்றனர். சூரபதுமன் எனும் அசுரன் இறைவனைநோக்கிச் செய்த வேள்வியில் தனது உடல் உறுப்புக்களைத் தானே அறுத்து வேள்வி செய்ததோடல்லாமல், தன்னையே வேள்வித்தீக்குப் பலியாக்கினான். இந்த அசுரர்கள் வல்லவர்கள் பிறருக்கு அல்லதைச் செய்து மகிழ்ச்சி அடைபவர்கள். சுரர்கள் என்றழைக்கப்பெறும் தேவர்கள் நல்லவர்கள். அவர்கள் பிறருக்கு நல்லதைச் செய்து மகிழ்ச்சி அடைபவர்கள். தேவர்களின் செயலில் வல்லமை குறைவாக இருக்கும். அசுரர்களின் செயலில் நல்லவை குறைவாக இருக்கும். இந்த மண்ணுலகில்கூட நல்லவர்களாக இருப்போர் வல்லவர்களாக இருப்பதில்லை. வல்லவர்களாக இருப்போர் நல்லவர்களாக இருப்பதில்லை. நல்லவனாகவும் வல்லவனாகவும் இருக்க நாம் முயலவேண்டும். திருப்புகழ்கூட இக்கருத்தில்தான் 'மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகி' என்று குறிக்கிறது

இணைந்து வாழும் எதிர்க்கட்சிகள் :

சுரர்களுக்குக் குரு வியாழபகவான். அசுரர்களுக்குக் குரு சுக்கிராச்சாரியார். சுரர்-தேவர், நல்லவர்கள். அசுரர்-நல்லவரல்லாதவர்கள். "வல் அசுரர் மாள நல்லசுரர் வாழ வல்லை வடி வேலைத் தொடுவோனே" என்பது அருணகிரியார் வாக்கு. வியாழனும் சுக்கிராசாரியாரும் எதிரிடையானவர்கள். உலகியல் வழக்கில் கூறினால் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனலாம். இன்று வீட்டிலும் எதிர்க்கட்சி ஆளுங்கட்சி இருப்பதைப் பார்க்கலாம். கணவன் ஆளுங்கட்சி என்றால் மனைவி எதிர்க்கட்சியாகவும், குழந்தைகள் பொதுமக்களாகவும் கொள்ளலாம் பொதுமக்களாம் குழந்தைகளின் தேவையை எதிர்க்கட்சியாம் மனைவி பக்குவமாகக் கணவனிடம் எடுத்துச்சொல்லிக் குழந்தைகளுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்துவிடுகிறாள். இதுபோல எல்லோரும் நல்லனவற்றைச் செய்வது என்ற ஒரேநோக்கில் செயல்பட்டால் மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும். மேலும் கணவனும் மனைவியும் எதிரிடையானவர்கள் எனினும் எதிரிகளாக நடந்துகொள்வதில்லை. அன்புடன் வாழ்கிறார்கள். இந்நிலையினைப் புராணங்களில் விளக்கியுள்ளார்கள். இதனை ஆட்சியாளரும் பின்பற்றினால் அனைவரும் நலம்பெறலாம் அல்லவா?

சுக்கிராசாரியாரின் தவவலிமையையும் மந்திர சக்தியையும் அறிந்த வியாழபகவான், தன்மகன் கசனை அனுப்பி அவரிடம் பயிற்சி பெற்றுவரச்செய்தார். சுக்கிராச்சாரியாரும் எதிரியின் மகன் என்ற எண்ணம் கொள்ளாமல் உண்மையாக 'அமுத சஞ்சீவினி' எனும் மந்திரத்தைக் கற்றுக்கொடுத்தார். அம்மந்திரத்தைக் கற்றுக்கொண்டு சென்று தன் தந்தையாகிய வியாழனுக்குத் தெரிவித்தார். அதன் பின்னரே தேவர்கள் அதன் பயனாய் அமரத்துவம் பெற்றார்கள்.

மகாபாரதத்தில்கூட எதிரியான துரியோதனனுக்கு நல்லநாள் பார்த்துக்கொடுத்தவன் பஞ்சபாண்டவர்களில்ஒருவனுன சகாதேவன் தான் என்பதையும் இங்கே சிந்தித்துப்பார்த்தல் தக்கதாகும். இங்ஙனம் எவ்வளவுதான் எதிரியாயிருந்தாலும் அவர்களின் தேவை கருதி வஞ்சனையின்றி உதவிய உயர்ந்த மனேபாவம் மக்களிடையே பரவுதல் பண்பாட்டிற்கு உகந்ததாகும்.

நல்லன கற்று நாளும் தெளிக:

இதுபோன்ற நல்ல கருத்துக்கள் எங்கிருந்தாலும் அதனைத்தேடிக் கற்றுத் தெளிந்து, அதன்படி நடந்து, மாணக்கர்கள் எனும் சொல் லுக்குப் பொருத்தமாக மாண்பு உடையவர்களாகத் தேர்ந்து வெளி யேறினல் நாடும் வீடும் நலம் பெறும் என்பதில் ஐயமில்லை

இருபத்தைந்து ஆண்டுகளாகக் கலைப்பொலிவோடும் அருட் பொலிவோடும் வளர்ந்துவந்துள்ள இக்கல்லூரி மென்மேலும் பல சிறப்புக்கள் பெறவும், இக்கல்லூரியின் வளர்ச்சியில் இடையருது நாட்டம்கொண்டு உழைத்துவரும் நிர்வாகக் குழுவினரும், முதல்வர் உள்ளிட்ட பேராசிரியர்களும், ஊழியர்களும், வளர்ந்துவ நம்மாணக்கர் களும் நலம்பலபெற்று நீடுவாழவும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

வாழ்க அன்பநாதபுரம் வகையார்.
வளர்க அவர்தம் கலைக்கல்லூரி.

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சிந்தியா தரோ.

— திருவானைக்காப் புராணம்.

முழுதுணர் முனிவர் தேற மூவகைப் பாசம் மாயப்
பழுதற ஒழிந்தான் மாக்கள் பதநிழல் அடங்கும் உண்மை
செழுமலர் பொருவும் அங்கை விரல்களால் தெரித்தி யாரும்
தொழுதெழக் கல்லால் நீழல் வதிபவர் துணைத்தாள் போற்றி.

— உறையூர்ப் புராணம்.

“கல்லூர்ப் பெருமணம் வேண்டா*”

திரு. ஒ. வி. அளகேசன்

“கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய்யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம் பானே”

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ‘கல்லூர்ப் பெருமணம் வேண்டா’ என்பதற்கு ‘அம்மியின்மேல் மனைவியின் காலை வைத்தல் முதலிய சடங்குகளை உடையதாகிய பெரிய திருமணம் எனக்கு வேண்டா’ என்று ‘ஒருசிலர்’ கூறும் பொருள்பற்றியும், ஏனைய அடிகளுக்குக் கூறும் பொருள்பற்றியும் சில ஐயப்பாடுகளை சென்றமாத இதழில் கட்டுரையாசிரியர் எழுப்பியுள்ளார் முதலில் மேலே கூறியுள்ளதைப் பார்ப்போம்.

மேலே கூறியுள்ள பொருளுக்கு உடன்படாமைக்கு அவர் கூறும் காரணம்: “பிற்காலத்தில் ‘அம்மி மிதிப்பக் கனாக்கண்டேன் தோழீ நான்’ என்று ஆண்டாள் பாடியிருந்தாலும் சம்பந்தர் காலத்தில் அந்த வழக்கம் இருந்தது என்பதற்கோ, அல்லது திருமணச் சடங்குகளில் முதன்மை பெற்றிருந்தது என்பதற்கோ யாது சான்றுளது” என்பதுதான். இதுஒன்றை மட்டும் ஆதாரமாகக் கொள்ளல் முறையன்று. திருஞானசம்பந்தர் காலத்தில் திருமணச் சடங்குகளில் அம்மி மிதிக்கும் வழக்கம் இல்லவே இல்லை என்று ஆகிவிடும்.

சேக்கிழார் பாலிகைகளில் முளைவிடுதல், மணமக்கள் கையில் காப்புநாண் கட்டுதல், அரசிலையையும் தருப்பையையும் கொண்டு கலசத்திலுள்ள நீரை வேதமந்திரங்கள் சொல்லித் தெளித்தல், கோத்திரம் முதலியகூறிப் பெண்ணைக் கொடுத்தல், பொரியிடுதல் முதலிய பல சடங்குகளைக் கூறுகிருர். திருஞானசம்பந்தர் திருமணத்தில் இத்தனை சடங்குகளை வெகு விபரமாகக் கூறும் சேக்கிழார் சுந்தரமூர்த்தி நாயனர் — பரவைநாச்சியார் வதுவையினையும், சுந்தரமூர்த்தி நாயனர் — சங்கிலி நாச்சியார் கலியாணத்தையும் ஒரு சடங்கும்

---

* சென்ற மாத இதழில் வெளிவந்த கட்டுரையைப் பற்றிய ஆய்வுரை.

கூருமல் வெகுசுருக்கமாக முடித்துவிடுகிருர். ஆகவே, அம்மி மிதித்தல் சடங்கினை அவர் கூருது விட்டிருக்கலாம் அல்லவா! எது எப்படியாயினும் திருஞானசம்பந்தர் காலத்தில் அம்மி மிதித்தல் சடங்கு இல்லை என்று உறுதியாகக் கூறமுடியாதநிலை உள்ளது

'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்னும் தொடரால், திருஞானசம்பந்தர் தமக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்பதனைக் குறித்தனராயின், அவர் முன்பு திருமணத்திற்கு உடன்படல் எவ்வாறு பொருந்தும் என்று ஐயம் நிகழும் என்பது ஆராய்தற்கு உரியதாகும்.

இந்த ஐயத்துக்கு நியாயம் இல்லை என்பது சேக்கிழார் கூறும் முறைமையைப் பார்த்தாலே புலனுகும். பெற்ருேரும் சுற்றத்தாரும் திருஞானசம்பந்தருக்குத் திருமணப் பருவம் வந்துள்ளது என்று எண்ணி அவரிடம் வந்து வேத நெறிப்படி வேள்வி முதலியன செய்வதற்கு ஒரு கன்னிகையை மணக்கவேண்டும் என்று விண்ணப்பிக்கிருர்கள். பிள்ளையார் அப்போது பந்த பாசங்கள் எல்லாவற்றையும் விடுகிற நிலையில் இருந்தபடியாலும், வைதிக நெறி ஒழுகி எய்த வேண்டிய பயனுகிய இறைவன் திருவருளை முன்னரே பெற்றவர் ஆனபடியாலும், அவர்களுடைய வேண்டுகோளுக்கு இசையாது 'நீங்கள் சொல்வது பொருத்தமே யாயினும் எனக்கு வேண்டாத ஒன்று' என்றுகூறுகிருர். மீண்டும் அவர்கள் 'வைதிக நெறியை நிலை நாட்டிய தாங்கள் அந்தநெறிப்படியே ஒழுகுதற்குத்திருமணம்செய்து கொள்ளவேண்டும்' என்று வற்புறுத்தவே பிள்ளையார் திருமணத்துக்கு உடன்படுகிருர். உடன்பட்டாராயினும் அவருடைய மனத்தில் ஆங்கிலத்தில் கூறுவதுபோல் Reservation இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இது பின் நிகழ்ச்சியினுல் தெளிவாகிறது.

பிறகு பெண்பார்த்தல் முதலிய திருமண ஏற்பாடுகள் நிகழ்கின்றன. பிள்ளைவீடாகிய சீகாழியிலிருந்து பெண்வீடாகிய திருநல்லூர்ப் பெருமணத்துக்கு மாப்பிள்ளையாகிய பிள்ளையாரும் அவரைச்சேர்ந்தவர்களும் மணம் போகிருர்கள். வைதிக விதிப்படி திருமணச் சடங்கு ஆரம்பமாகிறது. பிள்ளை பெண்ணின் கையைப் பற்றிக்கொண்டு ஓமத்தீயை வலம் வரும் சப்தபதி சடங்கு நடக்க வேண்டிய தருணம். பிள்ளையார், நம்பாண்டார்நம்பி பெற்ற நற்றவக் கொழுந்து போலும் மணமகளின் கையையும் பற்றிக்கொண்டார். அந்தத் தருணத்தில் பிள்ளையார் திருமனத்தில் ஒரு எண்ணம் பளிச்சிடுகிறது. 'திருமணச்சடங்கிற்கென அக்கினிவளர்க்கப்பட்டிருக்கிறது, வாஸ்தவம்; ஆனுல் உண்மையில் அக்கினியாவது சிவபெருமானே அல்லவே! மேலும், எனக்கு முன்னுள்ள ஓமத்தீயை வலம்வரின்

நானும் இவளும் உலகில் ஏனையமாந்தர்போல இல்வாழ்க்கை யன்றோ மேற்கொள்ளவேண்டும். அதைத் தவிர்ப்பதற்கு இவளோடு சிவன் தாள் சேர்வதே தகும்" என்று பிள்ளையாருக்கு எண்ணம் ஓடுகிறது. உடனே, மணப்பெண்ணின் கையைப் பற்றிக்கொண்டு, திருமணம் காணவந்துள்ளார் அனைவரும் உடன் வர, திருப்பெருமணம் கோயிலுக்கு எழுந்தருளுகிறார்.

பிள்ளையாரின் வாழ்க்கை வரலாறு முழுவதையும் மனத்தில் வைத்துக்கொண்டு பார்க்குமிடத்து, மேலே கூறியுள்ளதில் என்ன முரண்பாடு உள்ளது. 'தம்மை மூன்று வயது குழந்தைப் பருவத்தில் முதல்முதலாக ஆண்டுகொண்டதிலிருந்து இதுவரையில் தம்மை நடத்தி வருகிற இறைவன் தனது பாத நிழலில் தன்னைச் சேர்த்துக் கொள்ளப் போகிறான்; அதற்குரிய பருவம் வந்து விட்டது' என்ற உள்ளுணர்வு பிள்ளையாருக்கு உண்டாகிறது.

உடனே 'கல்லூர்ப் பெருமணம்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடுகிறார். அந்தப்பதிகத்தின் செப்பொருள் பிறவிப் பாசம் தீர்ப்பது என்று சேக்கிழார் கூறுகிறார். அதை 'நல்லூர்ப் பெருமணத்தானை, உறும்பொருளாற் சொன்ன ஒண்தமிழ்' என்று பிள்ளையார் தாமே திருவாய்மலர்ந்தருளுகிறார். அந்தக்கணத்திலேயே அது பலிதம் தருகிறது. இறைவன் 'நீயும் உன் மனைவியும் உன் திருமணத்துக்கு வந்துள்ள அனைவரும் இங்கு தோன்றும் எமது சோதியில் வந்துசேருங்கள்' என்று கூறுகிறார். இதில் திருமணத்தை வெறுக்கும் பேச்சுக்கோ, பெண்ணினத்தை வெறுக்கும் பேச்சுக்கோ இடமில்லை. திருமணம் செய்துகொண்டவர்களுள்ளும் சிலராவது திருமணம், பெண்ணினம் இரண்டையுமோ அன்றி இரண்டனுள் ஒன்றையோ வெறுப்பவராக இருத்தல் கூடுமேயன்றோ! ஆகவே, 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்னும் தொடருக்கு 'உலகியலை ஒட்டிய திருமணம் எனக்கு வேண்டுவதின்று' என்று பொருள் கூறுவதில் இழுக்கு ஒன்றும் இல்லை.

அடுத்து, 'கல்' என்னும் சொல் அம்மியைக் குறிக்கிறதா என்று கேள்விவரும்போது, அது அம்மியைக் குறிக்காது, பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறும் நடுகல்லைக் குறிக்கிறது; இறப்புத் துன்ப நிலையினை அதற்குப் பொருளாகக் கொள்ளலாம் என்று ஆசிரியர் கூறுகிறார்.

மங்களமான கல்யாண நாளில், மங்களமான முகூர்த்தத்தில், மங்களமான வாத்தியங்கள் முழங்கும் மங்களமானதொரு சூழ்நிலையில் பிள்ளையார் இப்படி எடுத்த எடுப்பிலேயே ஒரு அமங்கலப் பொருளை உள்ளத்துக்கொண்டு கூறுவாரா என்று வினவுவோருக்கு விடையாக

மங்கல வழக்காலே சொன்னுர் என்கிருர் ஆசிரியர். இயல்பாகவே மங்கலமாக உள்ள ஒருசொல்லுக்கு அமங்கலமாகப் பொருள்கொண்டு நேராக மங்கலப்பொருள் வழங்கும் அந்தச் சொல்லை மங்கல வழக்காக மாற்றுகிற ஒரு அறிவுப்பகுதி முயற்சி (Intellectual exercise) யை ஆசிரியர் மேற்கொண்டதற்குரிய காரணம் சிந்தித்தற்குரியது.

இனி ஆசிரியர் கூறும் பொருளின் பொருத்தத்தை ஆராய்வோம். அடியார்கள் நடுகல்லில் நிற்பதாக வழக்கு இல்லை. அவர்களுடைய விக்கிரகங்களைத் திருக்கோயிலில்வைத்து வழிபடுகிருேம். வீரராஞர் இறந்துபட்டால் நடுகல்லில்நிற்பது பண்டைக்கால வழக்கெனினும் வாதாபிப்பட்டணத்தைப் பொடியாக்கிய வீரர் பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்ட நாயஞருக்குக்கூட நடுகல் நாட்டியதாக இல்லை.

'கல்' என்னும் சொல்லில் முற்காலத்து நடுகல்லையும் பிற்காலத்து அம்மியையும் விடுத்து எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய வேறு பொருளையும் காணலாம். தேவாரம் என்னும் பூட்டிற்குச் சாவி வேண்டுமாயின் சேக்கிழாரிடந்தான் கேட்கவேண்டும். அவர் திருஞானசம்பந்தர் திருமணத்தை வெகுபுஷ்கலமாகப் பாடுகின்ருர். ஏதாவது ஒரு நிகழ்ச்சி சிறப்பாக அமைந்ததென்ருல் 'மேளதாளத்தோடு ஜாம் ஜாம் என்று நடந்தது' என்கிருேம். பிள்ளையார் திருமணத்தில் பலவகையான மங்கள வாத்தியங்களின் ஒலியும், திருச்சின்னங்களின் ஒலியும், சங்கொலியும், வேதஒலியும், திருமுறை ஒலியும் மிக மலிந்திருந்த செய்தியைச் சேக்கிழார் திரும்பத் திரும்பக் கூறுகிருர். சேக்கிழார் பாடுகிருர்:

'சங்கொடு தாரை சின்னம் தனிப்பெருங் காளம் தாளம்
வங்கியம் ஏனை மற்று மலர்துளைக் கருவி எல்லாம்
பொங்கிய ஒலியின் ஓங்கிப் பூசுரர் வேத கீதம்
எங்கணும் எழுந்து மல்கத் திருமணம் எழுந்த தன்றே''

இப்படியே மேலும் கூறிக்கொண்டு போகிருர்.

ஆகவே 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்பதற்குப் 'பல்வகை ஒலிகளும் பரந்த பெரிய திருமணம் எனக்கு வேண்டுவதின்று' என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும் என்னலாம்.

இதற்கு ஏற்ப, பிற அடிகளுக்கும் பொருள்கொள்ளலாம். "திருநல்லூர்ப் பெருமணக் கோயிலிலே அமர்ந்துறையும் எம்பெருமானே! மங்கல ஒலி மல்கும் திருமணம் எனக்கு வேண்டுவதின்று (என்று நான் கூறினல்). சீகாழி முதலாகப் பல தலங்களிலும் நான் உண்மைப்

போற்றிப் பரவிப் பாடிய பாடல்கள் எல்லாம் மெய்யில்லை என்று ஆய் விடுமா? (ஆகா என்று பொருள்) மேலும். (வாழையடி வாழையாக வரும்) உன்னுடைய தொண்டர்கள் மந்திர மொழிகளால் ஆன அப் பாடல்களைத் தங்கள் தலைமீது வைத்துப்போற்றுதல் செய்யமாட்டார் களா? (போற்றுவார்கள் என்று பொருள்)''

இதுதான் பாடலுக்குப் பொருள், வேறு பொருள் இன்று என்று நான் கூறுவதாக யாரும் கொள்ளவேண்டாம். இப்பொருள் பொருந் துமா என்று பார்க்குமாறுதான் அறிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாம், மூன்றும் அடிகளுக்கு ஆசிரியரும், நானும் கூறிய பொருளே அன்றி வேறு பொருள் கொள்வோரும் உளர்.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

ஆலமுண் டானிடம் கொண்ட திரு வலிதாயம்
அமருந்தா யம்மைகண்டு
அமரர்பணி கின்றவட திருமுல்லை வாயிலுறை
அம்மைகொடி யிடைநாயகி
சேலன கண்ணியர் தொழுந்திரு வேற்காடு
செல்விவேற் கண்ணியம்மை
சென்றுமேற் செல்வர் சேவிக்கு மயிலாப்பூர்
திகழும்கற் பகவல்லியே
மாலயன் காணு அரன்மகிழ் வான்மியூர்
வளர்சொக்கநா யகியம்மையே
மஞ்சுதவ ழுந்திருக் கச்சூரா லக்கோயில்
மகிழ்மங்கை அஞ்சனாட்சி
பாலன்னம் பலநாளும் பயில்நடைப் பாவையே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (34)

தருமையாதீனம் ஆவணிமூலத்திருநாள்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சந்நிதியில்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்குப்
பொன்னுடைபோர்த்தி ஆசியருளல்
21—8—80



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு
'செந்தமிழ்க்காவலர்'
என்ற பட்டம் பொறித்த
பொற்பதக்கம் வழங்கியருளல்.

கங்கை கரந்தார்

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

அமரர்கள் தாம் என்றும் சாவாமல் வாழலாம் என்று எண்ணி அமுது கடையத் தொடங்கினர்; திருமால் பள்ளிகொண்டருளும் ஆழமான கடலைக் கடையலாயினர். அப்போது சிவபெருமானை நினைக்கவில்லை. முதலில் அமுதம் உண்டாகவில்லை. ஐராவதம் வந்தது; உச்சைசிரவம் தோன்றியது; இந்திரன் அவற்றை உரிமையாக்கிக் கொண்டான். திருமகள் தோன்றினாள். திருமால் அவளை உரியவளாக்கிக் கொண்டார். மேலும் கடைந்தபொழுது ஆலகாலவிடம் தோன்றியது. அது எழும்போதே யாவரும் அதன் வேகம் தாங்க மாட்டாமல் மயங்கினர் அப்போதுதான் அவர்களுக்கு இறைவனுடைய நினைவு எழுந்தது. "எம்பெருமானே! ஓலம்" என்று ஓடிவந்து கதறி முறையிட்டார்கள். 'இதுகாறும் எம்மை எண்ணாமல் இப்போது வந்தீர்களே!' என்று சிவபெருமான் சொல்லவில்லை. அவர் ஆசுதோஷன்; கணப்பொழுதில் திருவுள்ளத்தில் உவகை கொள்பவன். 'இப்பொழுதாவது வந்தார்களே!' என்று இரங்கி அந்த நஞ்சை வாங்கி உண்டான். அதைத் தன் திருக்கழுத்தில் வைத்துக்கொண்டான் அந்த நீலகண்டத்தைப் பார்த்தேனும் அமரர்கள் தம்பலவீனத்தை அறிந்து, செருக்கடங்கி நிற்கட்டும் என்ற திருவுள்ளத்தோடு இறைவன் நஞ்சணி கண்டனாக விளங்குகிறான்.

ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டார்.

அவ்வாறு அவன் அந்த நஞ்சினை உண்ணாமல் இருந்திருந்தால் தேவர்கள் அப்போதே மாய்ந்திருப்பார்கள். இறைவன் தன் கருணையினால் அதை உண்டு, அவர்கள் மேலும் கடைந்து அமுதத்தைப் பெற்று நுகரச் செய்தருளினான். அவன் அருள் இல்லாமல்போயிருந்தால் அவர்கள் அமுதம் உண்டிருக்கமுடியாது. அவர்கள் அமுதம் உண்பதற்காக அவன் நஞ்சை உண்டான்.

ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டார்,
அமுதம் அமரர்க்கு அருளி.

பட்டும் பீதாம்பரமும் பொன்னும் மணிகளும் பிறர் புனையத்தந்து இறைவன் பாம்பையே அணிகலனாகக் கொண்டான். நஞ்சுடைய

பாம்பு இப்போது இறைவனைச் சார்ந்த அணிகலனாகத் திகழ்கிறது. ஆலகால நஞ்சையே உண்டவனுக்கு இந்தப் பாம்பின் நஞ்சு எம்மாத்திரம். அந்த நஞ்சு கழுத்தில் நீலமணிபோல் விளங்குகிறது. இந்தப் பாம்பு அரைஞாணாக இருக்கிறது

சூழ்தரு பாம்பு அரை ஆர்த்து.

இறைவன் தன் திருக்கரத்தில் சூலாயுதத்தையும் ஒளியை வீசும் மழுவையும் ஏந்திக்கொண்டிருக்கிறான். தன்னை அடைந்தவர்களுக்கு வரும்கேடுகளைப் போக்குவதற்கு அவை பயன்படும். 'என்னை நம்பினவர்களுக்கு எந்தத்துன்பமும் வாராமல் காப்பாற்றுவேன்' என்பதைப் புலப்படுத்துவதற்காக அந்தப் படைக்கலன்களைத் தாங்கிக்கொண்டு விளங்குகிறான்

சூலமொடு ஒண்மழு ஏந்தி.

அவன் தன் திருமுடியில் குளிர்ந்த மதியைத் தரித்திருக்கிறான். அது ஒளிததும்ப, அங்கே இருக்கிறது. அந்தத்திருமுடியில் கங்கையும் இருக்கிறது. அதனைச் சடைக்குள் கரந்து வைத்திருக்கிறான். அதை எப்படி ஏற்றுக்கொண்டான் தெரியுமா! பகீரதன் செய்த தவத்துக்கு முதலில் கங்கை இரங்கவில்லை. "என்னைத் தாங்குபவர் யார்?" என்ற செருக்குடன் இருந்தாள். பகீரதன் இறைவனை நோக்கித் தவம் புரிந்தான். எம்பெருமான் கங்கையை ஏற்க உடம்பட்டான். கங்கை ஆரவாரம் செய்துகொண்டு எழுந்துவந்தது. 'விண்ணுக்கடங்காமல் வெற்புக்கு அடங்காமல் மண்ணுக்கு அடங்காமல்' முழங்கிக் கொண்டுவந்தது.

இறைவன் அந்தக் கங்கையைத் தன்னுடைய சடைகளில் ஒன்றிலே ஏற்றுக்கொண்டான். அலைகளை வீசிக்கொண்டுவந்த கங்கை அந்த ஒரு சடைக்குள் அடங்கி மறைந்துவிட்டது.

தாழ்தரு புன்சடை வாங்கித்
தண்மதியம் அயலே ததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார்.

இருக்கிற இடம் தெரியாமல் ஒருசடைக்குள் அடங்கிவிட்டது கங்கை. 'பரந்தது நிரந்துவரு பாய்திரைய கங்கை, கரந்தொர்சடை மேன்மிசை உகந்தவன்" என்பது திருக்கருப்பறியலூர்த் தேவாரம். கம்பரும் இந்தச் செய்தியைச் சொல்கிறார்.

"உந்தி யம்புயத் துதித்தவன் உறைதரும் உலகும்
இந்தி ராதியர் உலகமும் நடுக்குற இரைந்து
வந்து தோன்றினள் வரநதி ; மலைமகள் கொழுநன்
சிந்தி டாதொரு சடையினிற் கரந்தனன் சேர."

(அகலிகைப்படலம்-55)

தாழ்ந்த சிவந்த சடையில் கங்கையைக் கரந்தவுடன் பிறைச் சந்திரன் அதனிடையே மிதந்து தோணிபோலத் தோன்றுகிறது.

இப்படியெல்லாம் இருக்கும் இறைவனுடைய இயல்புகளை ஞான சம்பந்தப் பெருமான் திருவேட்களத்தில் கோயில் கொண்டுள்ள பாசு பதேசுவரரைத் தரிசிக்கும்போது நினைவுகூர்கிறார்.

வேட்கள நன்னக ராரே.

திருவேட்களம் என்பது சிதம்பரத்தின் அருகில் உள்ளது. இன்று அண்ணாமலை நகர் என்ற பெயரோடு விரிவு பெற்று விளங்கும் திருத்தலம் அதுதான்.

ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டார்,
அமுதம் அமரர்க்கு அருளிச்
சூழ்தரு பாம்புஅரை ஆர்த்துச்
சூலமொடு ஒண்மழு ஏந்தித்
தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்
தண்மதி யம்அய லேததும்ப
வீழ்தரு கங்கை கரந்தார்
வேட்கள நன்னக ராரே.

திருவேட்களத்திலுள்ள நல்ல திருக்கோயிலில் எழுந்தருளியிருப் பவராகிய சிவபெருமான், ஆழமாக உள்ளதும் திருமாலுக்கு உரியது மாகிய பாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சை உண்டார் ; அவ் வாறு உண்டமையால் அமுதத்தை அமரர் உண்ணும்படி அருள் செய்து, சுற்றிய பாம்பைத் தம் இடையிலே அரைஞாணாக் கட்டி, சூலத்தோடு ஒளியையுடைய மழுவையும் திருக்கரத்தில் ஏந்தி, குளிர்ந்த சந்திரன் அருகிலே மிதந்து விளங்கும்படி தாழ்ந்துள்ள சிவந்தசடையை வளைத்து, அதில் வானத்திலிருந்து ஆரவாரத்தோடு வீழ்ந்த கங்கையை ஏற்று மறைத்தருளினார்.

[மால்கடல் - பெரியகடல் எனினும் ஆம். அமரர்கட்கு அமுதத்தையருளித் தாம் நஞ்சை உண்டார். சூழ்தரு - சுற்றிய, ஆர்த்து - கட்டி, ஒண்மழு - விளக்கம் பெற்ற மழு, புன்சடை - சிவந்தசடை, வாங்கி - வளைத்து, 'மதியம் மயலே' என்ற இடத்து இசைநோக்கி மகரம் இரட்டித்தது, ததும்ப - பொங்குவதுபோல மிதக்க, வீழ்தரு - வானத்திலிருந்து வீழ்ந்த, நன்னகர் - நல்லகோயில்; வேட்களமாகிய நல்லநகரத்தில் எழுந்தருளியிருப்பவர் என்றும் பொருள் கூறலாம். ஏகாரம்: ஈற்றசை.]

இது திருஞானசம்பந்தர் தேவாரம்; முதல் திருமுறையில் உள்ளது.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி
வேலூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

சார்ந்தவர்க் கின்பமே அருளுமா லங்காடு
தையல்வண் டார்குழலியே
சங்கரன் தங்கிமகி ழுந்திருப் பாசூர்த்
தலைவிபசு பதிநாயகி
ஏந்துமனல் கையனிடம் கொண்டதிரு வெண்பாக்கம்
இனிதுவாழ் மின்னலொளியே
என்றும்நினை பவரிடர் களைந்திடும் திருக்கள்ளில்
இறைவியா னந்தவல்லி
காந்தன்கா மனைக்காய்ந்த கண்ணுத லுறைதிருக்
காளத்தி நகரில்நம்மைக்
காக்கின்ற ஞானப்பூங் கோதையம் மைநாளும்
கைதொழும் திருவொற்றியூர்
பாந்தளா பரணரோ டுறைவடி வுடையம்மை
பண்ணிலுறு வெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (33)

திருப்பேணுபெருந்துறை, திருநறையூர்ச்சித்தீச்சரம் தலச் சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

1. திருப்பேணுபெருந்துறை

சோழவளநாட்டில் தஞ்சைமாவட்டம் — கும்பகோணம் வட்டத்தில் நாச்சியார்கோயிலுக்குக் கிழக்கே 3 கி. மீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. இது திருப்பந்துறை என வழங்கப்படுகிறது. கும்பகோணம் — காரைக்கால் பேருந்து வழியில் அமைந்துள்ள இத்தலத்தை அடையப் பேருந்து வசதிகள் நிரம்ப உள்ளன. பூந்தோட்டத்திலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் வரும் பேருந்துகளில் வந்தால் கோயிலின் அருகில் இறங்கலாம். ஆற்றின்கரைகளில் அமைந்த தலங்களும் இறைவன் அருள்விளங்கும் தலங்களும் துறை என முடியும் பெயர்களால் குறிக்கப்படுகின்றன. இத்தலம் அரிசிலாற்றின் கரைமேல் உள்ளதால் பெருந்துறை எனப்பட்டது.

'தழையார் மாவின் தாழ்கனி உந்தித்
தண் அரிசில் புடைசூழ்ந்து
குழையார் சோலை மென்னடை அன்னம்
கூடு பெருந்துறையாரே'

எனவரும் இத்தலத் தேவாரப்பாடலாலும் இதனை அறியலாம். திருப்பெருந்துறை எனவழங்கும் தலத்திலிருந்து பிரித்தறிதற்கு அடைமொழி கூட்டிப் பேணுபெருந்துறை என வழங்கப்படுகிறது. பேணுதல் - விரும்புதல்.

தலப்பெருமை :

உமையம்மை, முருகன், பிரமன் ஆகியோர் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்திருப்பதிகம் ஒன்றைப் பெற்றது. இத்தலத்திலுள்ள இரட்டை விநாயகர் தரிசிக்கத்தக்கவர். சுவாமி சுயம்புமூர்த்தி. பிக்ஷாடனர் மிக்க பெருமை உடையவர். சித்திரைப் பரணியில் அமுது படையல் நடைபெறுகிறது. முருகப்பெருமான்

முகைத்தன்மை நீங்கிய தலம். நாடோறும் சூரியபூசை நிகழும் பெருமைபெற்றது.

கோயிலமைப்பு :

இத்தலத் திருக்கோயில் கிழக்குநோக்கி உள்ளது. கோயில் வாயிலில் மங்களதீர்த்தம் உள்ளது. தீர்த்தக்கரையில் விளங்கும் இரட்டை விநாயகராகிய குகவிநாயகர், சாக்ஷிவிநாயகர்களை வழி பட்டுப் பழமையான வன்னிமரத்தை வலமாக வந்து கோயில்வாயிலை அடையலாம்.

சிறிய இராஜகோபுரத்தை அடுத்து, துவஜஸ்தம்பமும் நந்தி பலி பீடங்களும் உள்ளன. ஒருதிருச்சுற்றுமட்டும் காணப்படுகிறது. தென் புறம் விநாயகர் சமயாசாரியர் சோழமன்னன் அவன் மனைவி தனி மண்டபத்தில் விளங்குகின்றனர். மேற்கே கன்னிமூலையில் தல விநாயகரும், அடுத்து முருகனும், அடுத்து கஜலக்ஷ்மியும் எழுந் தருளியுள்ளனர். கோஷ்டங்களில் தென்பால் நர்த்தனவிநாயகர், தக்ஷிணாமூர்த்தி, மேற்கே இலிங்கோத்பவர் வடக்கே பிர்மா விஷ்ணு துர்க்கை உள்ளனர். சண்டேசுரர் தனிமண்டபத்தில் உள்ளார். கிழக்குப் பிராகாரத்தில் நவக்கிரகங்கள் விளங்குகின்றனர். வலமாக வந்து முன்மண்டபத்தை அடைவோம். வாயிலில் விநாயகரும் முருகனும் விளங்குகின்றனர்.

மகாமண்டபத்தின் வடபால் அம்பாள்கோயில் உள்ளது. தெற்கு நோக்கி அம்பிகை எழுந்தருளியுள்ளார். ஸ்நபனமண்டபத்தில் நந்தி தேவரை வழிபட்டு அர்த்தமண்டப வாயிலை அடைவோம்.

சுவாமிகோயில் வாயிலில் முருகப்பெருமான் விளங்குகிறார். பழமையான முருகனின் திருவுருவமும் சின்முத்திரையோடு சுவாமி யைத் தியானித்து வழிபடும் நிலையில் தண்டபாணியும் விளங்கு கின்றனர். இம்மூர்த்திகள் இக்கோயிலுக்கு மிக்க சிறப்பைத் தருகின் றனர். வழிபட்டுப் பேணுபெருந்துறை இறைவரைத் தரிசிப்போம். தானே தோன்றிய சுயம்புலிங்கமாகப் பெருமான் பேரழகோடு திகழ்கிறார்.

> மூவரும் ஆகி இருவரும் ஆகி முதல்வனு மாய்நின்ற மூர்த்தி
> பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப் பல்கணம் நின்று பணியச்
> சாவமதாகிய மால்வரை கொண்டு தண்மதில் மூன்றும் எரித்த
> தேவர்கள் தேவர் எம்பெரு மானார் தீதில் பெருந்துறை யாரே.

என்ற இத்தலத் தேவாரத்தை ஓதி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். மங்களாம்பிகை சந்நிதி மிக்கசிறப்புடையதாக விளங்கு

கின்றது. வழிபட்டு மகிழலாம். மாட்டுப்பொங்கல், நவராத்திரி விழா, சித்திரைப்பரணி ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்கின்றன.

மூர்த்திகள்:

சுவாமிபெயர் அருள்மிகு சிவானந்தேசுவரர். பிரணவேசுவரர் என வழங்கப்படுகின்றார். கல்வெட்டுக்களில் பேணுபெருந்துறை மகாதேவர் எனக்குறிக்கப்படுகிறார். அம்மைபெயர் அருள்மிகு மலையரசியம்மை. மங்களாம்பிகை என வழங்கப்படுகிறார். இத்தலத்திலுள்ள பிக்ஷாடனர் பழமையும் கலையழகும் உடையது. இத்தலத் தேவாரத்தில் பிக்ஷாடனர் குறிக்கப்படுகிறார். தலமரம் — வன்னி. தீர்த்தம் — மங்கள தீர்த்தம்.

கல்வெட்டுக்கள் :

ஆதியில் செங்கற்கோயிலாக இருந்த திருப்பேணுபெருந்துறை கரிகாற்சோழன் காலத்தில் கற்கோயிலாயிற்று என்று கல்வெட்டு தெரிவிக்கிறது. இராஜராஜ சோழன், வீரபாண்டியன் முதலிய பெருமன்னர்காலத்துச் சாசனங்கள் இக்கோயிலில் காணப்படுதல் இத்தலத்தின் பழமைக்குச் சான்றாகும்.

அரசியலார் 1932—ல் படியெடுத்த கல்வெட்டுக்கள் ஐந்து உள்ளன. மதுரைகொண்ட பரகேசரி 22ம் ஆண்டுக் கல்வெட்டில் திருநறையூர் நாட்டுக் கிராமமான பேணுபெருந்துறை எனவும், இறைவன்பெயர் பேணுபெருந்துறை மகாதேவர் எனவும் குறிக்கப்பெற்று உள்ளன. இராஜராஜன் ஆட்சி 14ம் ஆண்டில் பாண்டியகுலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக்கூற்றத்து அரைசூராள் ஒருத்தியால், அமாவாசையில் சுவாமி அம்மன் பெரியதேவர் அஸ்திரதேவர் உலாப்போதவும் அரிசிலாற்றில் தீர்த்தங்கொடுக்கவும் நிலமளித்தாள். வீரபாண்டியன் ஆட்சி 6 ம் ஆண்டில், நல்லுடையான் வழுதூரானால் சுவாமிபடிமம் செய்துகொடுக்கப்பெற்றது.

பைம்மாநாகம் பன்மலர்கொன்றை
பன்றிவெண்கொம்பொன்று பூண்டு
செம்மாந்தையம் பெய்கென்றுசொல்லிச்
செய்தொழில்பேணியோர் செல்வர்
அம்மானோக்கி யந்தளிர்மேனி
யரிவையோர்பாக மமர்ந்த
பெம்மானல்கிய தொல்புகழாளர்
பேணு பெருந்துறையாரே.

2. திருநறையூர்ச்சித்தீச்சரம்

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் வட்டத்தில் நாச்சியார் கோயிலுக்கு அருகில் இத்தலம் உள்ளது. ஊர்ப்பெயர் - திருநறையூர். கோயிற்பெயர் சித்தீச்சரம். கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோயில் நோக்கி வரும் பேருந்துகளில் இத்தலத்திற்கு வரலாம். சோலைகளின் நறுமணம் ஊரெங்கும் மிகுந்து விளங்குவதால் இத் தலம் நறையூர் என்று வழங்கப்பெறுகிறது. இதனைத் திருஞான சம்பந்தர் ‘பொழிலின் நலமலர் சிந்தவாச மணம் நாறும்வீதிநறையூர்’ எனக்குறித்தருள்கிறார் வடமொழியில் இத்தலம் சுகந்தவனம் எனக் கூறப்படுகிறது பிரமபுரம், நரபுரம் என்னும் பெயர்களும் உள்ளன. இத்தலத்துக்கு அருகில் உள்ள நாச்சியார்கோயில் வைணவத்தலம்.

தலப்பெருமை :

இத்தலக்கோயில் மிக்க சிறப்புடையது. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் மூன்று, சுந்தரர் அருளிய திருப்பதிகம் ஒன்று ஆக நான்கு திருப்பதிகங்கள் உள்ளன. சோழமன்னர்களின் திருப்பணியைப்பெற்றது. சித்தர்கள் குபேரன் முதலியோர் வழிபட்ட தலம். துர்வாசமுனிவருடைய சாபத்தைப் பெற்றதால் பறவை உருவம் பெற்ற நரனும் முருகப்பெருமானும், பிரமன் திருமால் முதலி யோரும் வழிபட்ட சிறப்புடையது. அதிவீரன், மார்க்கண்டேயர், அருச்சுனன் ஆகியோர் பூசித்த பெருமையுடையது. சந்திரகுப்தன் என்னும் வணிகன் இத்தலத்து இறைவனை வழிபட்டுக் குட்டநோய் நீங்கப்பெற்றான். தர்மதாசன் என்னும் அமைச்சனும் சாரங்கதரரும் வழிபட்டுள்ளனர். மேதாவி முனிவர் இத்தலத்தில் இறைவனை வழி பட்டு இலக்குமியைப் புதல்வியாகப்பெற்றுத் திருமாலுக்கு மணம் முடித்தனர் என்பன இத்தலத்தைப்பற்றிய புராணவரலாறுகளாகும்.

கோயிலமைப்பு :

கோயில் மேற்குநோக்கியுள்ளது. கோயிலின் வடபால் தீர்த்தம் உள்ளது. ஐந்து நிலைக் கோபுரம் இக்கோயிலுக்கு அழகு தருகிறது. இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் வெளிப்பிராகாரம். முதலில் கொடிமர விநாயகர் காட்சி தருகிறார். அடுத்துக் கொடிமரம் உள்ளது. வெளிப்பிராகாரத்தில் அலுவலகம் உள்ளது.

வலம் வந்து முன்மண்டபத்தைக் கடந்து, இரண்டாம் கோபுர வாயில் வழியே உள்ளே சென்றால் வடக்கே நடராசப்பெருமானும் கிழக்கே காலபைரவர் வீரபைரவர் முதலிய மூர்த்திகளும் உள்ளனர்.

தெற்கே சோமாஸ்கந்தர், நால்வர், சப்தமாதர்கள், கிழக்கே ஆண்ட விநாயகர் ஆகியோர் விளங்குகின்றனர். கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் வடக்கே அர்த்தநாரீசுரர், பிக்ஷாடனர், பிரமன் முதலிய மூர்த்திகளும், கிழக்கே இலிங்கோத்பவரும், தெற்கே அகத்தியர், நடராசர், தக்ஷிணாமூர்த்தி ஆகியோரும் விளங்குகின்றனர். தக்ஷிணாமூர்த்திக்கு மேல் சட்டைநாதர் விளங்குகிருர். புராணவரலாற்றுச் சிற்பங்கள் சுவர்களில் உள்ளன ஸ்நபனமண்டபத்தை அடைந்து அர்த்தமண்டப வாயிலில் நின்று அருள்மிகு சித்தநாதேசுவரரை வழிபடுவோம்.

ஊருலாவு பலிகொண்டு உலகேத்த
நீருலாவு நிமிர்புன்சடை அண்ணல்
சீருலாவு மறையோர் நறையூரில்
சேரும் சித்தீச்சரம் சென்றடை நெஞ்சே.

என்ற இத்தலத் தேவாரத்திருப்பாடலை ஓதி வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அம்பாள் சௌந்தரநாயகி. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக விளங்குகிருர்.

மூர்த்திகள் :

விநாயகர் ஆண்டவிநாயகர் எனப்படுவார். பெருமான் அருள்மிகு சித்தநாதர் எனவழங்கப் பெறுகிருர். வேதலிங்கம் வேதேஸ்வரர் நரேசுவரர் என்ற பெயர்களும் உள்ளன. கல்வெட்டுக்களில் சித்தீச்சரம் உடையார், கங்காளதேவர் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. சிவலிங்கம் பேரழகுவாய்ந்தது. அம்பிகை திருப்பெயர் அருள்மிகு சௌந்தரநாயகி என்பதாகும். தமிழில் அழகம்மை எனப் பெறுகிருர். திருவுலாக்கொள்ளும் பஞ்சமூர்த்திகளும் நடராசர் சிவகாமியம்மை திருவுருவங்களும் அழகும் கலைச்சிறப்பும் உடையன. தலமரம் - பவளமல்லிகை. தீர்த்தம் - சூலதீர்த்தம்.

மாசிமாதம் விழா நிகழ்கிறது ஆவணிமாதம் சூரியபூசை. இத்தலத்துக்கு அருகில் அரிசிற்கரைப்புத்தூர், பேணுபெருந்துறை, சிவபுரம், திருக்கலக்குடி ஆகிய தலங்கள் உள்ளன.

இத்தலப்பெயர்கள் வந்துள்ள திருமுறைப்பாடல்கள்: திருநறையூர்ச்சித்தீச்சரம் 6-7-7, 6-13-8, 6-70-10, 6-71-4,8, 6-87-4, 7-12-4 7-31-6. (முதல் எண் திருமுறை. இரண்டாவது எண் பதிகம். மூன்ருவது எண் பாடல்கள்.)

கல்வெட்டு :

இத்தலத்தில் அரசியலார் படியெடுத்த கல்வெட்டுக்கள் 24 உள்ளன. அவற்றுள், முதல் இராஜராஜன் காலமுதல் மூன்ருங்குலோத்துங்கன் காலம் வரையிலுள்ள சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கி-பி. 1118 முதல் 1135 வரை ஆண்ட விக்ரமனே இத்தலத்தில் மிக ஈடுபாடுடையவன் என்பது தெரிகின்றது. இங்குக் குறிக்கப்பெற்ற அரசர்கள் இராஜராஜன் I, வீரராஜேந்திரன் II, குலோத்துங்கன் I, II, III, விக்ரமசோழன் இராஜராஜன் II, இராஜாதிராஜன் II.

இவைகளில், இவ்வூர் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத்திருநறையூர் நாட்டுத் திருநறையூர் எனவும், அருண்மொழித்தேவ வளநாட்டுத் திருநறையூர் எனவும், விக்கிரமன் முதற்குலோத்துங்கன் இவர்கள் காலத்துக் குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர் எனவும் பஞ்சவன்மாதேவியான சதுர்வேதி மங்கலத்துத் திருநறையூர் எனவும் குறிக்கப்பெற்றுள்ளது.

சுவாமி பெயர் சித்தநாதேஸ்வரமுடைய தேவர் எனவும் சித்தநாதேஸ்வர முடையார் எனவும் வழங்கும். இங்குள்ள பிக்ஷாடனதேவர் சிறப்புடையார் இவருக்குத் திருநறையூர்ச் சிவப்பிராமணர் ஒருவர் 30 காசு பொன்னை நிவேதனத்திற்காக அளித்தார் இங்கு வழிபாட்டிற்காகவரும் சிவயோகிகட்கு உணவுக்காக மண்ணிநாட்டுக் கருப்பூர் உடையான் ஒருவர் நிலம் விட்டார். இத்தலத்துள்ள பிடாரி கோயிலுக்கு நிலம்விட்ட செய்தியும் குறிக்கப்படுகின்றது. ஏனைய கல்வெட்டுக்கள் விளக்குக்காகவும் நிவேதனத்திற்காகவும் பலர் நிலமும் பொன்னும் அளித்ததை அறிவிக்கின்றன.

பிறைகொள் சடையர் புலியினுரியர் பேழ்வாய்நாகத்தர்
கறைகொள் கண்டர் கபாலமேந்துங் கையர்கங்காளர்
மறைகொள் கீதம் பாடச்சேடர் மனையின் மகிழ்வெய்திச்
சிறைகொள் வண்டு தேனூர் நறையூர்ச் சித்தீச்சரத்தாரே.

நேரியனாகும்மல்ல னொருபாலுமேனி யரியான் முனையவொளியான்
நீரியல்காலுமாகி நிறைவானுமாகி யுறுதீயுமாய நிமலன்
ஊரியல்பிச்சைபேணி யுலகங்களேத்த நல்குண்டுபண்டுசுடலை
நாரியொர்பாகமாக நடமாட வல்ல நறையூரினம்பனவனே.

கட்டுரை எண். 8.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D. U. N. I. U,

சென்னியது உன் பொன் திருவடித் தாமரை; சிந்தையுள்ளே
மன்னியது உன் திருமந்திரம்; சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறை முறையே
பன்னியது என்றும் உன்றன் பர ஆகம பத்ததியே (6)

அ. சென்னியது உன் பொன் திருவடித்தாமரை

(1) எனது தலையில் சூடியிருப்பது உனது பொன்போன்ற தாமரைத் திருவடிகளாகும் அல்லது எப்போதும் எனது சென்னியால் உனது திருவடிகளையே வணங்குகிறேன்.

(2) முன்பாடலில் விளக்கியபடி தீட்சைபெற்ற அம்பிகை உபாஸகர்களின் தலையில் அன்னையின் திருவடி பொருந்தியிருக்கிறதென்பதும் அதனால் அவர்கள் சாதாரணமனிதர்கள் யாரையும் வணங்கக் கூடாதென்பதும் மரபு.

(3) அம்பிகை அபிராமிபட்டரைத் தடுத்துஆட்கொண்டு வலிய பாத தீட்சை அருளியிருக்கிறாள். 'இதனை' ஆசைக்கடலில் ....' என்றபாடலில் அவரே குறிப்பிடுகிறார்.

(4) தலையினைப் படைத்த பயன் தாயினை வணங்குவதாலேயே கிட்டும். ஆகவே எப்போதும் அன்னையினை வணங்குவதற்கே தனது சென்னியினை அர்ப்பணித்தார். இறைவன் கொடுத்த அங்கங்கள் அனைத்தையும் இறைபணிக்கே உரியதாக்குதல் என்பது ஆன்றோர் கொள்கை. 'தலையே நீ வணங்காய்' என்ற அப்பர்பாடலும் இதனை வலியுறுத்தும்.

(5) மிகவும் அருமையான பொருள்களைப் பொன்னென மதிக்கிறோம். அன்புக்குரியவர்களையும் பொன்னே! மணியே! எனப்போற்றுகிறோம். பொன்னுசை என்றும் குறிப்பிடுகிறோம். அபிராமி பட்டர்

போன்றஞானிகட்கு அன்னையின் திருவடிகளே பொன்னென மதிக்கத் தகுந்த பொருளாகத் தோன்றுகிறது. ஆகவே ' உன் பொன் திருவடித் தாமரை ' என்கிருர்

ஆ சிந்தையுள்ளே மன்னியது உன் திருமந்திரம்

(1) எனது சித்தத்தில் எப்போதும் பொருந்தி நிலைபெற்றிருப்பது உனது மகாமந்திரமேயாகும்

(2) திருமந்திரம் என்ற சொல்லை ஸ்ரீவித்தை என்பதன் தமிழாக்கமாகவும் கொள்ளலாம். பெண்தெய்வங்களுக்கு உரிய மந்திரங்கள் 'வித்தை' எனப்படும் ஸ்ரீவித்தையே எப்போதும் சிந்தையில் நிலை நின்றது என்பது பொருள்.

(3) ஸ்ரீவித்யா மார்க்கத்தில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் 'பஞ்சதசாட்சரி' என்ற மந்திரமும் மற்ற மந்திரங்களுமே எப்போதும் அவரது சிந்தனையில் நின்றது.

(4) ஸ்ரீசூக்தம், துர்க்காசூக்தம், தேவிசூக்தம், ராத்திரிசூக்தம் ஆகியவை அம்பிகைக்குரிய வேதமந்திரங்களாகும். 'வேதஞ் சொன்னவழிக்கே வழிபட நெஞ்சுண்டு' என்பார் பின்பும்.

(5) பஹ்வ்ருசோபநிஷத்து, திரிபுரோபநிஷத்து, பாவனோபநிஷத்து ஆகியவை அம்பிகையின் உபநிடதமந்திரங்களாகும் 'சுருதிகளின் கொழுந்து' எனமுன்னரே அவற்றைக் குறிப்பிட்டார்.

(6) திருமூலரின் திருமந்திரம் தமிழில் அவளைப்புகழும் மந்திர நூலாகும்.

(7) ஆதிசங்கரரின் சௌந்தரியலகரியும் தோத்திரமாகவே அவளது பெருமையினையும் பண்புகளையும் விளக்கும் சிறந்த மந்திர நூலாகும்.

(8) 'சகஸ்ரநாம மகாமந்திரம்' என்று போற்றப்படும் லலிதா சகஸ்கரநாமமும் அவளது பெருமையினைப் பேசும் மந்திரநூலாகும்.

(9) இவ்வாறு அம்பிகைக்குரிய வேத, உபநிடத, சகஸ்ரநாம மந்திரநூல்களும் அவளது மூலமந்திரங்களுமே எப்போதும் அபிராமி பட்டரின் சிந்தையில் நிலை நின்றன.

(10) 'சர்வமந்திர ஸ்வரூபிணி' என்று போற்றப்படும் அம்பிகையின் மந்திரங்களைத்தவிர வேறு துர்த்தேவதைகளுக்குரிய 'ஆபிசார' மந்திரங்கள் எதுவும் அவரது சிந்தையில் நின்று அதனல் அவர் 'பித்தர்'போன்று காட்சிதரவில்லை என்பதைத் தெளிவாக்குகிருர்.

(11) மந்திரங்களில் மனம் பற்ருது சிந்தை பிறிதொன்றிலிருக்க, வெறும் 'முணுமுணுப்பு' மட்டும் செய்தல் பயன்தராது. மந்திரங்களுடனும் அவற்றிற்குரிய தெய்வங்களினிடத்தும் சிந்தையொன்றினுல்மட்டுமே அவற்ருல் பலனுண்டு. ஆகவே 'சிந்தையுள்ளே மன்னியது உன் திருமந்திரம்' என்ருர்.

(இ) முன்னிய நின் ....பத்ததியே

(1) உனது அடியவர்களுடன் எப்போதும் கூடி உனது மேலான ஆகமநெறிபற்றியே மீண்டும் மீண்டும் பேசுகிறேன் என்பது பொதுவான பொருள்.

(2) நல்லொழுக்கத்தால் சிறந்தும், வழிபாட்டில்பயிற்சிபெற்றும், அம்பிகையிடம் ஈடுபாடுகொண்டும் முன்னிலையில் நிற்கும் நல்ல அடியவருடன் கலத்தலே நன்மைபயக்கும். அப்பண்புகளில் குறையாத அடியார்களுடன் மட்டுமே கூடிப்பேசுகிருர். ஆகவே 'முன்னிய நின் அடியாருடன்' என்ருர்.

(3) அடியவர்களுடன் பேசவேண்டிய முறையிலும், அவர்களுடைய கல்வி, வயது, உபாசனை ஆகியவற்றுக்கேற்பவும் கேட்கவேண்டியவற்றைக் கேட்டும், சொல்லவேண்டியவற்றைச் சொல்லியும் மரபுவழுவா முறையில் பேசியதால் 'முறைமுறையே பன்னியது' என்ருர்.

(4) திரும்பத்திரும்பவும் ஒருவர்மாற்றி ஒருவர் என்ற முறையில் பேசியதாலும் 'முறை முறையே' என்ருர்.

(5) 'பன்னுதல்' என்பது விளக்கிப் பேசுதல்என்றும், மீண்டும் மீண்டும் பேசுதல் என்றும் பொருள்படும் ஒரேபொருள்குறித்தது. திரும்பத்திரும்பப்பேசிடில் 'பன்னிப் பன்னி அதையே பேசாதே' என்று கூறும் வழக்கு இன்றும் அபிராமிபட்டர் தோன்றி வாழ்ந்த தஞ்சைமாவட்டத்தில் உண்டு. மீண்டும்மீண்டும் பேசிடில் பயன் மிகத்தருவதாகிய பரஆகமபத்ததியினையேமுறைமுறையேபன்னினுர்.

(6) 'கலையாத கல்வியும் ... ...' எனத்தொடங்கும் பதிகப் பாடலிலும் 'பெரிய தொண்டரொடு கூட்டு' என வேண்டுகிருர். அன்னையின் அடியவருடன் கலந்து பழகிப் பேசுதலையே அவர் மிகவும் விரும்பினுர். அவர்கள்கூட்டே மிக்கபயன்தரும். அஃதன்றியும் பரஆகமபத்ததியினைப்பற்றிப் பேசும் பேறும் கிடைத்தால் மிகவும் சிறப்பாகுமன்ருே ?

(7) சிலநாட்களில் அல்லது சிலநேரங்களில்மட்டும் பர ஆகம பத்ததியினைப் பேசிவிட்டு மற்ற நேரங்களில் உலகியல் குறித்து (லௌகீக சம்பந்தமாக) சர்ச்சை செய்தல் நல்ல அடியார்களின் இயல்பன்று எல்லா நேரங்களிலும் உயர்வானவற்றையே 'இறை நெறிபற்றியே' எண்ணியும், பேசியும் வருதலே சிறப்பாகும். ஆகவே 'என்றும் உன் பர ஆகம பத்ததியே என்றார். 'பத்ததிமட்டுமே என்னும் பொருள்பட 'பத்ததியே' என ஏகாரத்துடன் கூறினர்.

(8) பத்ததி என்பது ஒழுங்குபடுத்தபட்ட ஒரு நெறியினைக் குறிக்கும். 'உத்ஸவபத்ததி' என்றும் 'பஜனைபத்ததி' என்றும்ஒழுங்கு படுத்தப்பட்ட வழக்கத்திலுள்ள - சம்பிரதாயமான நெறிகளைக்கூறுவர். அவ்வாறு பத்ததிகளில் கட்டுப்படாத தீய சக்திவழிபாட்டுமுறையில் ஈடுபடவில்லை என்பதும் முன்னோர் கண்டமரபுவழுவாநெறி நின்றே அன்னையினை வழிபட்டார் என்பதும் தெளிவு.

(9) மிக உயர்ந்த நிலையில் உள்ளதாலும், பரம்பொருளைக் காட்டு வதாலும், பிரம்மவித்தையினின்று வேறாகாத காரணத்தாலும் 'ஸ்ரீவித்தை' யினைப் 'பர ஆகம பத்ததி' என்றார்.

(10) ஸ்ரீதந்திரம் என்னும் ஸ்ரீவித்தையினை அம்பிகையின் வேண்டுகோளுக்கு இணங்கி அதனை முதலில் சிவபெருமான் அருளினார். அவ்வித்தையில் அனைத்தும் அடங்கியிருக்கக்கண்ட தத்தாத்திரேயர் 'தத்த-ஸம்ஹிதை' என்ற பெயருடன் 18000நூற் பாக்கள்கொண்ட நூலாக்கினர். பரசுராமர் அதனைச்சுருக்கி 6000 நூற் பாக்களில் அளித்தார். அவரது மாணவர் 'சுமேதஸ்' என்பவர் அதனை மேலும்சுருக்கி 'பரசுராம கல்பசூத்திரம்' என்னும் நூலாக் கினர் அதுவே இன்றும் தென்னாட்டில் தேவி வழிபாட்டுக்கு ஆதார ஆகம நூலாக விளங்குகிறது. லலிதா சகஸ்ரநாம உரையாசிரியர் பாஸ்கரராயரின் சீடர் உமாநந்தநாதர் பரசுராம கல்பசூத்திரத்தை யொட்டி 'நித்யோத்ஸவம்' என்னும் நூலை எழுதினர். மற்றும் பாஸ்கரராயர் 'வரிவச்யா ரகஸ்யம்' முதலான நூல்களின் மூலம் விளக்கினர். ஆதிசங்கரர் சௌந்தரியலகரியிலும் 'பிரபஞ்சஸாரம்' என்ற நூலிலும் ஸ்ரீவித்தையினை விளக்கினர்.

அம்பிகை வழிபாட்டுமுறையில் குண்டலினியோகம் முதலான வற்றைத் தமிழில் திருமூலர் தம் திருமந்திரத்தில் விளக்குகிறார். ஆர்தர் அவலான்என்னும் சர் ஜான் உட்ரஃப் Sir John wood Roffe ஆங்கிலத்தில், தேவிவழிபாட்டை விளக்குகிறார். பின்னும் சிதாநந்த நாதர், குஹானந்தநாதர் ஆகியோரால் சமீபகாலத்தில் ஸ்ரீ வித்தை விளக்கப்பட்டது. சங்கீத மூர்த்தி ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் 'நவா வரண கீர்த்தனங்கள்' முதலியவற்றின்மூலமாகவும் இசையுலகினும் ஸ்ரீ வித்தையினைப் பரப்பினர்.

தற்காலத்தில் பிரபல உரையாசிரியர் திரு. அண்ணு என். சுப்பிர மணிய அய்யர் அவர்களும் திரு. நஜன் (எஸ். நடராஜன்) அவர்களும் தேவி வழிபாடு சம்பந்தமான பல எளிய - அரிய நூல்களை வெளி யிட்டுவருகின்றனர்.

இவ்வாறு பரமசிவன் தொடங்கி, மகரிஷிகளாலும், மகான்களாலும் தொகுக்கப்பட்டும், சுருக்கப்பட்டும், விளக்கப்பட்டும், மொழிபெயர்க் கப்பட்டும், எளிமையாக்கப்பட்டும் ஒழுங்கான முறையில் நெறிப் படுத்தப்பட்டது ஸ்ரீவித்தை. எனவே அதனை 'பர ஆகமம்' என்றும் 'பத்ததி' என்றும் சிறப்பித்துக் கூறினர்.

(11) அந்நெறி மீண்டும் மீண்டும் சர்ச்சை செய்து, ஆராய்ந்து பேசினாலும் முடிவின்றி வாக்குக்கு எட்டாத உயர்ந்த நிலையில் இருப் பதால் பர ஆகமமாயிற்று.

(12) எனினும் அப்பர ஆகம பத்ததியினையே விரும்பிப்பேசி, அதனையே பின்பற்றினர் எளிதாகப்புரிந்துகொள்ளக்கூடியதெனினும் வேறு துர்த்தேவதைகளின் வழிபாட்டினை மேற்கொள்ளவில்லை; பர ஆகம பத்ததியினை மட்டுமே முறை முறையே பன்னினர்.

(13) அங்ஙனம் பர ஆகமத்தின் உட்பொருளாக விளங்கும் அன்னையினை வணங்கவும் புகழவும் நான் முன் என்ன புண்ணியம் செய்தேன் என ஆதிசங்கரரும் தன் 'சௌந்தரிய லகரியில்' வியந்து கூறுகிறார். முன்செய்த புண்ணியத்தின் பயனாகமட்டுமே கிட்டும் அவை அபிராமிபட்டருக்குக் கிடைத்திருந்தன. சென்னியில் திருவடி சூடி, சிந்தையில் மந்திரம் பொருத்தி, பர ஆகமம் பேசி, தனது முக் கரணங்களான மனம், வாக்கு, காயம் மூன்றினையும் அன்னைக்கே அர்ப்பணித்தார் அபிராமிபட்டர்.

ஈ. சிந்துர வண்ணப்பெண்ணே!

(1) சிந்துரம் போல் சிவந்த நிறமுள்ள அம்பிகையினை இப் பாடலில் சிந்துர வண்ணப்பெண்ணே, என அருமையும் உரிமையும் ததும்ப அழைக்கிறார்.

(2) லலிதா சகஸ்ரநாமமும் அதே பொருள்பட 'அருணா!' என்றும், 'ரக்த வர்ணா' என்றும் குறிப்பிடுகிறது.

(3) சௌந்தரியலகரியில் அம்பிகையின் சிவந்த வண்ணத் தியானத்தைக் குறிப்பிடும் சுலோகம் 'அருணாருப தியானம்' என தலைப்புப் பெறுகிறது.

உதயகால சூரியனின் ஒளிபோன்று சிவந்த அவளது திருமேனிப் பிரகாசத்தினால் சகல புவனங்களும் செம்பஞ்சுக் குழம்பில் மூழ்கியது போன்ற தோற்றத்தைத் தியானம் செய்யும் உபாசகர்களுக்கு ஊர்வசி உள்ளிட்ட அப்ஸரஸ் திரீகளும் வசமாகின்றனர் என அச்சுலோகம் குறிப்பிடுகிறது. அதாவது சிவந்த வண்ணத்துடன் அவளைத் தியானிக்கும் அடியவர்களுக்குத் தேவ மாதர்களும் வசமாகிறார்கள் என்பது கருத்து. அன்னையின் அடியவர்களுக்கு அத்தகைய ஆற்றல் ஏற்படினும் அதனைத் துச்சமாக எண்ணி மீண்டும் அன்னையின் பேரருளைமட்டுமே விரும்பி வணங்குவர்.

சிந்துர வண்ணப் பெண்ணைத் தியானித்துச் சிங்காரிகளை வச மாக்கும் ஆற்றலை வேண்டாது, அவளது பர ஆகம பத்ததியிலேயே திளைத்தார் பட்டர் என்பது போற்றற்குரியது.

(4) அவளது திருவடியினைத் தலையில் தாங்கி, அவளது திரு மந்திரத்தையே சிந்தையில் பற்றி, சிந்துர வண்ணப்பெண்ணைத் தியானிக்க மேற்படி ஆற்றல் கிட்டுகிறது. அவ்வாற்றலை உண்மை யான அடியார்கள் விரும்பி அவளை வேண்டார். அவ்வாற்றல் கிட்டினாலும் அவளது பர ஆகம பத்ததியினையே பற்றி பரகதி அடை வதையே விரும்புவர் என்பதும் விளங்குகிறது.

(5) சௌந்தரிய லகரியில் அருணரூப தியானமென்னும் சிந்துர வண்ண வடிவத் தியானத்தைக்குறிப்பிடும் சுலோகத்தின் பாராயண பலன் 'ஸ்திரிவசியம்' என்று கூறுவர். தேதியூர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது உரையில் அன்னையின் அடியவர்கள் பெண் வசியத்தை விரும்பார் என்றும், அவர்கள் பெண்களனைவரையும் அன்னையின் வடிவாகவே காண்பர் என்றும் விளக்குகிறார். அப்படி யாயின் ஆதிசங்கரர் ஏன் பெண்வசியத்தைக்கூறும் 'அருணரூப தியான' சுலோகத்தைச் செய்தார்? அதனையும் ஸ்ரீ சாஸ்திரிகள் தெளிவாக விளக்குகிறார்.

இல்லறத்திலிருக்கும் அடியவரின் மனைவி ஒருக்கால் மாறுபட்ட கருத்துள்ளவளாகஅமைந்துவிட்டால் அவளை அடியவர் அன்னையின் அருளால் தன்வழிப்படுத்திக்கொள்ளவே இந்த சிந்துரவண்ணத் தியானத்தைக் குறிப்பிட்டார் என்பதே அவர் விளக்கம்.

அவ்வாறே அபிராமி அந்தாதியில் இப்பாடலின் பாராயண பலனும் மாறுபட்ட கருத்துள்ள மனைவியினைத் தன்வழிப்படுத்துதல் ஆகும்.

சைவ சிகாமணி

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், தமிழாகரர். பேராசிரியர்,
டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆளுடையபிள்ளையாரின் அஞ்சாமை :

நம்பியாண்டார் நம்பிகள் மற்றொரு பனுவலில், இந்த அஞ்சாமையை மிக்க அழகுடன் ஓதுகின்றனர்.

"தத்துவனை நித்தனைச் சைவத் தவர் அரசை
வித்தகத்தால் ஓங்கு விடலையை — முத்தமிழின்
செஞ்சொற் பொருள்பயந்த சிங்கத்தைத் தெவ்வர் உயிர்
அஞ்சத் திகழ்ந்த அடலுருவை — எஞ்சாமை
ஆதிச் சிவனருளால் அம்பொன்செய் வட்டிலிற்
கோதில் அமிர் தம்நுகர் குஞ்சரத்தை — தீதறுசீர்க்
காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த — சீலத்
திருஞான சம்பந்தன் என்றுலகம் சேர்ந்த
ஒருநாமத்தால் உயர்ந்தகோவை "12

சிங்கம், வேழம் என்றெல்லாம் காரண காரிய முறையில் போற்றிக் கொண்டே வந்து, இறுதியில் 'அரசன்' என்று ஏத்திய அழகு இவ்வரிகளில் காணப்பெறும். பிள்ளையாரது அஞ்சாமையை நம்பிகள் எண்ணற்ற இடங்களில் புகழ்ந்துள்ளனர்;

"பண்டிதர் இன்பன் பரசமய கோளரி" 13

என்பன முதலிய அனைத்து மொழிகளில் ஈடுபட்ட சேக்கிழார் திருவுள்ளம் அவை அனைத்தையுமே ஏற்ற இடங்களில் ஏற்ற பெற்றி எடுத்து ஆண்டு மகிழ்ந்துள்ளமை அறிவுலகம் அறிந்ததேயாகும்.

---

12 ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை வரிகள் 65 – 74.

13 ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் பா 37.

நம்பிகள் முதற்கண் போற்றிய திறன் :

நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியை முதற்கண் பாடிய பிறகே, திருத்தொண்டர் திருவந்தாதி பாடியருளினார்; ஏனெனில், 'சைவசிகாமணி' யாக விளங்கும் திருஞான சம்பந்தர் தெய்வப்புகழைப் பேசியபிறகே ஏனைய திருத்தொண்டர்களை யெல்லாம் ஏத்துதல் வேண்டும் என்று நம்பிகள் எண்ணினராதல் வேண்டும்; அதனாலேயே முதற்கண் பாலறாவாயரை எண்ணி அந்தாதி பாடினார். இதற்குச் சான்றாக, நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாடியுள்ள முப்பத்துநான்காம் பாட்டுத் துணை நிற்கின்றது

"பந்தார் விரலியர் வேள் செங்கட் சோழன் முருகன் நல்ல
சந்தார் அகலத்து நீலநக்கன் பெயர் தான் மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டு அடியேன் கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான் அருட்காழியர் கொற்றவனே" 14

இத்திருப்பாட்டின் மூன்று நான்காம் வரிகள். இந்த நூலை – அறுபத்து மூவர் புகழ் விரிக்கும் அரும்பனுவலைப் – பாடும் முன்னரே, திருஞான சம்பந்தரையே முதற்கண் பாடித் தொழுதனர் நம்பிகள் என்ற பேருண்மைக்கு அடிப்புலமாய் நிற்கின்றன.

பிற்கால மரபு :

சைவநெறியின் தலைமை சான்ற அருளாளராக விளங்கும் திருஞானசம்பந்தரையே முதற்கண் வைத்து மொழியும் வழக்கைப் பிற்கால நூல்கள் அனைத்தும் மேற்கொண்டுள்ளன. இறைவன் திருவடி நிழலை எய்திய நிலையிலும், பாலறாவாயரே முதற்கண் நிற்கின்றார். திருக்கோயில் சிற்பங்களிலும் நால்வர் திருவுருவங்களில், ஆளுடையபிள்ளையார் திருவுருவத்தையே முன்னர் வைத்துப் பழைய முறையினைப் பாதுகாத்துள்ளனர் நம்முன்னோர். இவையனைத்தையும், ஒன்றுசேர நோக்குங்கால், நம்பியாண்டார் நம்பிகள் "சைவசிகாமணி" என்று பிள்ளையாரைக் கூறிக்கூறி மகிழ்வது எத்துணைப் பொருளாழம் உடைய புகழஞ்சலி என்பது புலனாகும். இனியும், "சைவசிகாமணி" என்ற திருப்பெயரைக் கையாண்டு சைவ உலகம் தொன்மரபு காக்கும் தூநெறி நிற்பதாக.

14 திருத்தொண்டர் திருவந்தாதி பா 34.

ஒரு விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு

சித்தாந்தப் புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.

அண்மைக்காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த அறிவியல் அறிஞர்களில், குலிஎல்மோ மார்க்கசா மார்க்கோனி (Guglielmo Morchesa Marconi) என்பவர் ஒருவர். இத்தாலிய நாட்டைச் சார்ந்த இவர் சிறந்த மின்பொறி அறிஞர்; இயற்கைப் பொருள் நூல் ஆராய்ச்சி வல்லுநர். கி. பி. 1874 முதல் 1937 வரை வாழ்ந்திருந்தவர். இவரது கண்டுபிடிப்புக்களில் மிகவும் தலைசிறந்தது, கம்பியில்லாத் தந்தி (Wireless Telegraph) ஆகும். மார்க்கோனி அவர்கள் கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தபோது. அவர்தம் நண்பர்கள் சிலர், அவருக்கு ஒரு விருந்தளித்து அவரைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்தனர். "மனிதன் முயன்றால் எதையும் சாதித்துவிடலாம்; முயற்சியினால் முடியாதது எதுவும் இல்லை; கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும், பிறவும் தேவையில்லை" என்றகருத்தின்போக்கில், மார்க்கோனியின் நண்பர்கள் அவரைப் பெரிதும் புகழ்ந்து பேசினர். ஆனால் மார்க்கோனி அவர்களோ, நண்பர்களின் பாராட்டுக்கு நன்றிமொழி பகருங்கால், பின்வருமாறு குறிப்பிட்டார்.

"நான் மிகவும் சிறியவனாக இருந்தபோது, என் பெற்றோர்கள் தினந்தோறும் காலை மாலை வேளைகளில், பைபிள் படித்துப் பிரார்த்தனை செய்யுமாறு, என்னை வற்புறுத்துவர். அதன் சிறப்பையும் பயனையும் உணர இயலாத நிலையில், சிறுவயதினனாக இருந்த யான், அவர்களின் வற்புறுத்தலுக்காகப் பயந்து பைபிள் படித்து பிரார்த்தனை செய்வதுபோல நடிப்பேன். அப்போதெல்லாம் என் பிஞ்சுமனத்திற்குள்" "இங்கே ஓர் அறையில் இருந்துகொண்டு, பைபிளைப் படித்துச் சில வரிகளை ஒப்பித்தால், அங்கே நெடுந்தொலைவில் பரமண்டலத்தில் உள்ள பரமபிதாவாகிய ஆண்டவனுக்கு. ஒருகால் அவன் இருந்தாலும் கூட, எங்கே? எப்படி கேட்கப்போகிறது' என்று எனக்குள் முணுமுணுத்துக்கொள்வேன்.

ஆனால் இன்று கம்பியில்லாத தந்தியினைக் கண்டுபிடிக்க நேர்ந்த தன்மூலம் என் வாழ்க்கையிலேயே ஒருபெரும் ஐயம் தீரப்பெற்றேன். கம்பியில்லாத் தந்தியின்மூலம் ஒருவர் பேசுவதை எத்தனை ஆயிரம் மைல்களுக்குஅப்பால் இருந்தாலும் மற்றொருவர் கேட்டுஉணரமுடியும் என்பது, இப்போது நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. இங்ஙனமே 'பக்தன் ஒருவன் உண்மையான அன்புடன் தம் உள்ளம்திறந்து, தன் குறைகளை எவ்வளவு மெல்லியகுரலில் முறையிட்டுக்கொண்டாலும், அவைகளை இறைவன் நன்றாகச் செவிமடுப்பான். பக்தனின் முறையீடுகள் இறைவனுக்கு நன்றாகக் கேட்கும். பக்தனின் வேண்டுதல்களைச் செவிமடுக்கும் இறைவன் நிச்சயமாக மனம் இரங்கிப் பக்தர்களுக்கு அருள்புரிகின்றான் என்னும் உண்மையையும், இப்போது நான் நன்றாகத் தெளிவுற உணருகின்றேன். நெடுங்காலமாக யான் கொண்டிருந்த ஒரு பெரிய ஐயப்பாடு. எனக்கு இப்போது தீர்ந்துவிட்டது. நம்முடைய குறைகளையும் துயரங்களையும் இறைவனிடம் மண்டியிட்டு முறையிட்டுப் பிரார்த்தனை செய்துகொள்வது, ஒரு போதும் வீண்போவதில்லை. நிச்சயமாகப் பலனளிக்கின்றது. கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடிக்கநேர்ந்ததன்மூலம், நான் என்வாழ்க்கையில் இவ்வுண்மையை நன்றாக உணர்ந்து கண்டுகொண்டேன்''

இளஞ்சிறுவன் என இருந்தேன்; எந்தையார்
நாள்தோறும் என்னைப் பைபிள்
உளங்கெழும ஓதுகென் பார்; ஓதிலையேல்
உணவில்லை என்றுரைப்பார்;
அளந்தறியாத் தொலைவிலுள்ள ஆண்டவன், நம்
முணுமுணுப்பை அறியான் என்பேன்;
தெளிந்துணர்ந்தேன், கம்பியில்லாத் தந்திஇஃதால்;
செவிமடுப்பன் தேவன் என்றே!

— ந. ரா. முருகவேள்

இவ்வாறு மிகச்சிறந்த அறிவியற்பேரறிஞராகிய மார்க்கோனி அவர்கள் கூறியிருப்பது, இறைவனை நோக்கி முறையிட்டுக்கொண்டு, நாம் செய்யும் பிரார்த்தனையின் சிறப்பையும், பயனையும் நமக்கு நன்கினிது தெளிவுற உணர்த்துவதாகும்.

ஆவணிமூலவிழாக் கடிதங்களுள் சில :

குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Wishing the function success Convey our felicitations to our Sentamil Kavalar.

★

மதுரை ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Wishing the Avani Moola function every success. Mahasannidhaanam.

★

இலக்கிய ரஸிகமணி

டாக்டர் திரு. எஸ் மகராஜன் பி. எஸ்ஸி, பி. எல். சென்னை.

* டாக்டர் கி. ஆ பெ அவர்கள் 80 ஆண்டான இளைஞர். தமிழிலே ஆழ்ந்து வேரூன்றி மலர்ந்த சான்ருேர் சைவ சமயத்திலும் பெரிதும் ஈடுபட்ட பெரியார். அவர்களுக்கு வழங்கப்படப் போகிற பட்டம் மிகவும் பொருத்தமான தாகும். செந்தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் மனமாரப் பாராட்டப்போகிற பட்டம் அது. அவர்கள் 120 ஆண்டு வாழ்ந்து செந்தமிழ்க் காவலராகவும். சைவ சமயக் காவலராகவும் திகழவேண்டும் என்று மகாசந்நிதானம் ஆசி அருள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

★

செந்தமிழ்ச் செல்வர்

திரு. கி வா. ஜகந்நாதன் எம். ஏ. சென்னை.

சிவச்செந் நெறியை வளர்க்கின்ற திருவார் தருமை ஆதீனத்
தவச்செங் கோலை ஓச்சுகின்ற சாமி, தமிழின் நயந்தெரிந்தே
உவக்கும் இயல்பார் சண்முகப்பேர்த் தேசிகேசன், உயர்வுடையான்,
பவக்குன் றத்தை எறிஞானப் பண்பன் திருமுன் இஃதுறுக.

* ஆவணி மூலத்திருநாளில் இவ்வாண்டில் அன்பர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களுக்குச் செந்தமிழ்க் காவலர் என்ற பட்டத்தை வழங்கத் திருவுள்ளம்கொண்டிருப்பதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்ப்புலவர்களை ஆதரித்துப் பலவகை யிலும் சிறப்புச் செய்யும் மகாசந்நிதானத்தின் வள்ளன்மையும் தமிழன்பும் வானுயர ஒலிக்கும் புகழைப் பெறுவன. பட்டம் பெறும் அறிஞரைப் பாராட்டி வாழ்த்துகிறேன். *

மும்மொழிக்கொண்டல்

திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை எம். ஏ., எல். டி. சென்னை.

* திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் 'செந்தமிழ்க் காவலர்' பட்டம்பெறஇருப்பது அவர்கள் தமிழுக்கும்தமிழர்சமுதாயத் திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் பல்லாண்டு ஆற்றிவந்துள்ள தொண்டினைப் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. உழைப்பால் உயர்ந்த ஒருவரை, திருவுடையாரை, சிராப்பள்ளிமேவியசெல்வரை, மேலும் தமிழ்த் தொண்டிலும் சிவத்தொண்டிலும் ஈடுபடுத்திப் பல்லாண்டு பணிகொள்ளுமாறு இறையருளை வேண்டுகிறேன்.

★

சித்தாந்தப் புலவர்மணி

புலவர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். சென்னை.

நந்தமிழ் வளரத் தமிழகப் புலவர்
குழுஒன்று நலம்பெற அமைத்தும்,
சந்ததம் நமது தமிழகம் தழைக்கத்
தமிழர்தம் பேரவை அமைத்தும்,
முந்துபல் பணிசெய் கி. ஆ. பெ. வி. ஆம்
'முத்தமிழ்க் காவலர்' தமக்குச்
"செந்தமிழ்க் காவலர்" பட்டம் வழங்கல்,
சிறப்பும், நற் பொருத்தமும் ஆகும்!

★

சித்தாந்தக் கலைஞர்

டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி எம். ஏ., பிஎச். டி. சென்னை

தமிழ்தந்த பெருந்தகவின் நிலையே தானாய்
தனியியல்பை மிகக்கணித்த இலக்கே தானாய்
இமிழ்திரையார் நலவுலகில் இவரே யன்றி
இவர்க்கினியர் எவரொருவர் தாமும் இன்றி
அமிழ்தெனவே பலவிளக்கம் வாழ்க்கை மூலம்
அறிஞருளம் மிகமகிழ ஆக்கும் சீலம்
தமிழ்தமிழே எனநின்று காக்கும் வீரர்
தரணிதனில் கி. ஆ. பெ. வாழ்க வாழ்க.

(தொடர்ச்சி 472 ஆம் பக்கம் பார்க்க)

நிறைபணி விழா

வம்மின் அடியீர் நாண்மலரிட்டுத் தொழுதுய்ய
உம்மன்பினொடெம் அன்புசெய் தீசன் உறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித் திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழலையே — சம்பந்தர்.

நிறைபணி என்பது புரட்டாசித்திங்கள் பௌர்ணமிநாளில் சிவபிரானுக்கும் அம்பிகைக்கும் செய்யப்பெறும் ஏகதின உற்சவமாகும். இவ்வாண்டு 24—9—1980 புதன்கிழமை இவ்விழா திருக்கோயில் தோறும் நடைபெறும்.

முன்னொருகாலத்தில் திருமால் கருடன்மேல்திருவுலாவந்தபோது துர்வாச முனிவர் சிவபெருமானுக்குச் சாத்திய வில்வ மாலையைத் திருமாலிடம் சிவப்பிரசாதமாகத் தந்தார். திருமால் அதனை மதியாது வாங்கிக் கருடன்மேல் வைக்க, அதைக்கண்ட துர்வாசர் சினந்து, 'திருமால், திருமகளைப் பிரிந்து செருக்கொழிந்து வாழுமாறு' சாபம் தந்தார். உடனே திருமகள் திருமாலைவிட்டுப் பிரிந்தார்; கருடனும் மறைந்தது; திருமகளையும் கருடனையும் இழந்த திருமால் வருந்திக் காட்டில் அலைந்து திரிந்தகாலத்தில், கௌதம முனிவர் திருமாலின் நிலையினை உணர்ந்து சிவ அபராதம் நீங்க, சிவபெருமானை உபாசிக்குமாறும் அவ்வாறு உபாசித்தால் மீண்டும் திருமகளை அடையலாம் என்றும் கூறினார்.

திருமால் தெளிவுற்று, புரட்டாசித்திங்கள் பௌர்ணமியில் சிவபெருமானை சிறந்த முறையில் அபிஷேகங்கள் செய்தும் அணிகலன்கள் சூட்டியும், மலர்களால் அர்ச்சித்தும்வழிபட்டார். பெருமான் திருமாலின் பூசைக்கு மகிழ்ந்து அருள்வழங்கினார். திருமால் திருமகளையும் கருடனையும் பெற்றுச் சிறந்து வானவர் உலகம் சென்று, தான் பெற்ற நன்மைகளையும் புரட்டாசிப் பௌர்ணமியில் சிவபெருமானை வழிபடுவதால் ஏற்படும் சிறப்புக்களையும் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களுக்குக்கூற, அவர்களும் அந்தநாளில் உமாமகேசனை உபாசித்து இஷ்ட சித்திகள் பலவும் பெற்று இன்புற்றார்கள் என்று 'சிவரகஸ்யம்' கூறுகிறது.

நிறைபணி விழா எனப்போற்றப்பெறும் இவ்வழிபாட்டு முறைகளைக் காரணாகமத்தில் மாத பூஜாப் பிரகரணத்தில் காணலாம். பெருமானுக்குச் சந்தனாதித்தைலம் சாத்தி முறையே மாப்பொடி, நெல்லிமுள்ளிப்பொடி, மஞ்சள்பொடி, ஜலதிரவியம், பசுநெய், பால், பசுவின் தயிர், தேன், கருப்பஞ்சாறு, சர்க்கரை, பழவகைகள், பழச்சாறுகள்

இளநீர் முதலியவற்றாலும் அன்னாபிஷேகம் தாராபிஷேகம் சிருங்காபிஷேகம், ரத்னோதகம், தர்ப்போதகம், அர்க்யோதகம் ஆகியவற்றாலும் அபிஷேகம் செய்விக்கவேண்டும்.

திருவொற்றாடை சாத்தியெடுத்து நிவேதனங்கள் செய்து, சிவப்புப்பட்டுச் சாத்திக் குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், சாம்பிராணித் தைலம் முதலியன சேர்ந்த சந்தனம் விபூதி சாத்துதல் வேண்டும். புஷ்பராக இரத்தினத்தை மிகுதியாகக் கொண்ட அணிகலன்களை அணிவித்து, நறுமணம் உடைய மலர்களாலும், சிறப்பாகத்தேவதாரு மலர், விஷ்ணுகிராந்திமலர், பொன்னூமத்தைமலர், வெள்ளறுகு, தாமரைமலர் இவைகளாலும் அலங்கரித்து ஜவ்வாது சாத்தி வழிபட வேண்டும். நல்ல நெய்சேர்த்துத் தயாரிக்கப் பெற்ற சம்பா அன்னமும், நாரத்தை எலுமிச்சை ஊறுகாய்களுடன் அப்பம், அதிரசம், பிட்டு, வடை, சுழியன், எள்ளுருண்டை, அவல், நெல்பொரி, தேங்காய்த் துருவல், கரும்பு முதலியவற்றுடன் நிவேதனம் தீபாராதனை செய்ய வேண்டும். அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம் என்ற ஐந்து பத்திரங்களால் அர்ச்சித்துத் துதிக்கவேண்டும்.

நட்டபாடைப்பண் பாடி சிம்மாநந்தம் என்ற தாளத்துடன் புஜங்கத்திராசம் என்ற நர்த்தனமும் செய்வித்துப் போற்றுதல் வேண்டும். 26 தீபங்கள் ஏற்றவேண்டும். பலதலங்களிலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இறைவன் சந்நிதிகளில் தாவணங்கள் இட்டு, புதிய ஆடைகளால் மேல் விதானங்கள் கட்டி, இளநீர், காய், கனி முதலியவைகளைத் தொங்கவிட்டு அழகுறுத்துவர். இறைவனுக்கு அபிஷேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்யப்படும் இவ்விழா நிறை பணி விழா எனப்படும்.

பயன்:— நினைத்த காரியங்கள் கைகூடுவதுடன் செல்வச் செழிப்பும் ஏற்படும். மறுமைக்கும் வீடுபேறு கிடைக்கும். உலக மக்கள் நன்மைபெறுவர்.

(470 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A. L. T. மதுரை.

* இவ்வாண்டு ஆசிபெறுதற்குரிய திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பல நாட்களாகத் தமிழிற்கும் கடவுட் கொள்கைக்கும் தொண்டு புரிபவர்கள் அவர்களை இவ்வாண்டு சிறப்பிக்கத் திருவுளங் கொண்டது மிகவும் பொருத்தமே என என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்திகள்

ஆயில்யத்திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 11—8—80 திங்கள் அன்று திருவன்னியூர், திருக்கருவிலிக்கொட்டிட்டை என்ற தலங்களிலும் 7—9—80 ஞாயிறன்று திருப்பேணுபெருந்துறை, திருநறையூர்ச்சித்தீச்சரம் என்னும் தலங்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆங்காங்கும் மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. தலப்பதிகங்களை ஆதீன ஓதுவாமூர்த்திகள் முறையாகப் பாராயணம் செய்தனர். ஆராதனையின்போது ஆயில்ய விழா வெளியீடாக அச்சிடப்பெற்ற தலப்பதிக நூல்கள் அவ்வத்தலங்களில் அன்பர்கட்கு வழங்கப்பட்டன. ஆதீனக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ சொற்பொழிவாற்றினர். அன்பர் பலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

தருமையாதீனத்தில்

ஆவணிமூலப் பெருவிழா

தருமையாதீனத்தில் 19, 20, 21—8—80 ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. விழா நாட்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்களின் ஆன்மார்த்தமூர்த்தியாக விளங்கும் ஸ்ரீசொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

21—8—80 வியாழக்கிழமை ஆவணிமூல நன்னாள் அன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ வழிபாடு நிகழ்வுற்றது. விழாமலராகத் "திருஎழுகூற்றிருக்கை (பழைய உரையுடன்) வெளியிடப்பெற்றது. இந்நாளில் ஆண்டுதோறும். அறிஞர் ஒருவருக்குச் சிறப்புப் பட்டமளித்து, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருள்வார்கள். அம்முறையில் இத்நன்னாள் மாலை வழிபாட்டின்போது ஸ்ரீல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், டாக்டர் திரு. கி. ஆ பெ. விசுவநாதம் அவர்களுக்குச் 'செந்தமிழ்க்காவலர்' என்ற பட்டம் அளித்து பொன்னாடைபோர்த்தி ஆசி வழங்கினார்கள்.

ஆவணிமூல விழாவை ஒட்டி மூன்று நாட்கள் தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா, ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மாலை 8 மணிமுதல் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா 19—8—80 செவ்வாய் அன்று தோத்திரத் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்கள் சிறப்புரையாற்றினர். பேராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ. 'மூவர் தமிழ்' என்ற பொருளிலும் வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர். 'மூவர் அருள் வரலாறு' என்ற தலைப்பிலும் சொற்பொழிவு நிகழ்த்தினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியரால் கலைநிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

தருமையாதீனத் தேவாரப்பாடசாலை, வேதசிவாகம பாடசாலை ஆண்டுவிழா 20—8—80 புதனன்று சாத்திரத் திருநாளாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. த. விவேகானந்தம் பி. ஏ., பி. டி. அவர்கள் சிறப்புரையாற்றினர். பேராசிரியர் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., 'சாத்திர நூல்கள்' பற்றியும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் 'சாத்திர ஆசிரியர்கள்' பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவர்களால் கலைநிகழ்ச்சி நடத்தப்பெற்றது.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, சைவ சித்தாந்தக் கல்லூரி ஆண்டுவிழா 21—8—80 ஆவணிமூலநாள் அன்று புராணத் திருநாளாக நிகழ்வுற்றது. இறைவணக்கத்திற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஆசியுரை (குருவாரமாதலால்) ஒலிபரப்பப்பட்டது. 'செந்தமிழ்க் காவலர்' திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிறப்புரையாற்றித் தம் நன்றியைத் தெரிவித்தார்கள். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. 'பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல்' பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். தருமையாதீனக் கல்வி நிலையங்களின் மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. திருநெல்வேலி திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் புதிதாக அமைக்கப்பெற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் என்ற அமைப்பினைப்பற்றி விளக்கிக்கூறினர். விழாவிற்குப் பல அறிஞர்களும், மாயூரம் நகரப்பெருமக்களும் வந்திருந்தனர். இறைவழிபாட்டுடன் விழா இனிது நிறைவேறியது.

(தொடர்ச்சி 480 ஆம் பக்கம் பார்க்க)

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

ரௌத்திரி ஹு புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய.

(17—9—80 முதல் 16—10—80 முடிய)

ஸ்ரீ ரௌத்திரி ஹு ஆவணிமீ 31உ மங்களவாரம் கேட்டை நக்ஷத்திரம் வணிசைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 39 நாழிகை 14 விநாடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான ஸ்ரீ சூரியபகவான் லோகமக்களின் வித்தகமேன்மைக்கு அருளி தீட்சண்யஞானம் ஏற்படும் பொருட்டு சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசி சங்கிரமணமாக, புரட்டாசிமாதப் பிரவேசம் செய்தருளுகிறார். அன்று ஷடசீதிபுண்ணியகாலமாகும் மறுதினம் புதவாரம் புரட்டாசி மாதம் முதல்தேதியாகிறது. சங்கிரமகால கிரகஸ்திதியினால் உலகில் பிரஜைகள் கல்வி, விஞ்ஞானம், கணிதஞானங்களில் சிறந்து விளங்குவர். சமூக களிப்புக்கான சங்கீதம் நடனக்கலை கதாகாலட்சேபங்கள் நவீனம் பொருந்தி மிளிரும். ஓவியக்கலை சிற்பக்கலை கட்டடக்கலை உற்பத்தியைப் பெருக்கும். இயந்திர ஆலைத் தொழில் ஆகியவற்றில் மக்கள் முன்னேற்றமாகவும் பொருளாதாரத்துடனும் விளங்குவார்கள். தேசங்களில் ஜனப்பிரதிநிதிகள் ஜனாதிபதிகள் மந்திரிகள் பிரஜைகளின் நல்வாழ்வுக்கும் பொருளாதார உயர்வுக்கும் நல்ல செயல் திட்டங்களை ஏற்படுத்தி தெய்வநீதியாகப் பரிபாலனம் நடத்துவர். பிரஜைகள் சாஸ்திர சம்பிரதாய நடைமுறையில் கலாச்சாரம் மதாச்சாரம் தெய்வபக்தி ஆகிய பண்பாட்டினில் உயர்ந்து வாழ்க்கை வசதிகள் பலவும் பெற்று உய்வார்கள்

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜயோகத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான தருமகான்கள் தம் திருவாய் மலர்ந்து பிரஸ்தாபிக்கின்றபடி லோகமெங்கும் சிவபுண்ணிய கைங்கரியங்கள் நடந்துவரும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில்

நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்புடன் நடைபெறும். தெய்வ சன்னிதிகளில் தெய்வநாம தோத்திரம் பக்திப் பாடல்கள் வேதமந்திர ஒலிகள் வாத்திய இன்னிசைகள் முழங்க விசேஷ தெய்வ ஆராதனை கள் நடைபெறும். மக்கள் பரவசத்துடன் தெய்வதரிசனம் செய்து ஆனந்திப்பர். லோகத்தில் க்ஷேமம் நிலவும்.

குருபெயர்ச்சி

குறிப்பு :— ஸ்ரீரௌத்திரி௵ புரட்டாசிமீ 3௳ (19—9—80) சுக்கிரவாரம் பூராட நக்ஷத்திரம் அன்று சூரிய உதயம்முதல் 9 நாழிகை 57 வினடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ குருபகவான் மேடாதியாக 150 பாகை தூரம் கடந்து உத்திர நக்ஷத்திரம் 2 ஆம் பாதத்தில் கன்னியா ராசியில் பிரவேசிக்கிருர். இதனுல் லோகத்தில் நல்ல மழை பெய்து விளைந்து பொருள்கள் பெருகும். பசுக்கள் விருத்தியாகும். ஸ்திரி ஜனங்களுக்கு நல்லன ஏற்படும். நூல் வஸ்திரம் மலியும். செங்கோல் உயர்ந்து பிரஜைகள் க்ஷேமமாக இருப்பார்கள்

லோகத்தில் ரிஷபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இந்த ராசியுடையோருக்கு தன தானியங்களின் நிறைவு, குடும்ப சுபம், புத்திரபாக்கியம், வாகனபிராப்தி, விவாக பிராப்தி, ஸ்திரீதனம்வருதல், நல்ல சௌகரியம் ஆகிய நற்பலன் தரும்.

மேஷம், கன்னி இவ்விராசியுடையோருக்குக் குருவுடன் வேறு கிரக சேர்க்கை இருப்பதால் கொடுக்காதென்றிருந்த நற்பலன்களைக் கொடுத்துக்கொண்டிருக்கும். காரியஜெயம், சத்ரு இருணம் ரோகங் களுக்குப் பரிகாரம் ஏற்படுதல், தெய்வபக்தி மேலிடுதல் ஆகும்

மிதுனம், கடகம், துலாம், தனுசு, கும்பம் இவ்விராசியுடையோ ருக்குச் சாதாரண பலனுக நடக்கும். யோக ஜாதகத்தினருக்கும் தற்காலம் திசாபுத்திகள் சுபமாக உள்ளோருக்கும் ஜாதக விசேஷத் தால் நற்பலன்களையே அளித்துவரும்.

எல்லா இராசியை யுடையோரும் தேவாலயம் சென்று குருபகவா னுக்கும் அருள்மிகு தக்ஷிணமூர்த்தி சுவாமிக்கும் அபிஷேக ஆராதனைகள்செய்து தரிசித்து வேதம் ஓதுவோருக்கு வஸ்திரதானம் சுவர்ணதானம் செய்துவர, சகல பாக்கியங்களும் பெருகும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼
(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்திவரும். சகோதரர்

நலம் நன்ருக இருந்துவரும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் விசேஷ பலன் தரும். எல்லாக்காரியங்களும் துரிதமாக செயல் பட்டு வரும். அரசாங்கத்தில் நன்மதிப்பு உண்டாகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 8, 9 தேதிகளில் நல்லனவற்றில் செலவு செய்யும். 1, 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் எதிர்பாராதவகையில் வந்துசேரும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்ருக இருந்துவரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். விவசாயத்தில் நற்பலன் வந்துசேரும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 10 11 தேதிகளில் நிர்ப்பந்த செலவினங்கள் ஏற்படும். 2, 3; 29 30 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவு செலவுகளில் சரளநிலைமையை ஏற்படுத்தும். சகோதரர் விசுவாசம் ஒற்றுமை பலம் தரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் முன்னேற்றஸ்திதி ஏற்படும். 15 தேதிக்கு எத் தனித்த காரியத்தில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 12, 13 தேதிகளில் ஓர் அவசியமான செலவை ஏற்படுத்தும். 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபி விருத்தியில் தனம் தானியம் பெருகிவரும். இரத்தினபூஷணங்களின் பிராப்தியைத்தரும். வாகனபிராப்தியில் புதுமை ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் பிரசித்தம் ஆகும். எல்லாக்காரியங்களையும் ஊக்கத்துடன் செயல்படுத்துதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும், புரட்டாசிமீ 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். 15, 16 தேதிகளில் காரியார்த்தமாகச் செலவை உண்டுபண்ணும். வெள்ளி சனி சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவரவுகள் கணிசமாகவரும். வித்துவத்துவத்தில் பிரசித்தம் தரும். எல்லா விஷயங்களிலும் தெளிவான நிலைமையை உண்டுபண்ணும். ஜீவனோபாயத்தொழிலில் உயர்வுதரும். வாழ்க்கை சௌகரியங்கள் நன்ருக இருந்துவரும். புத்திரனுக்கு நல்லஸ்திதி ஏற்படும். புரட்டாசி மாதம் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். 17, 18 தேதிகளில் அவசிய மான செலவைச்செய்யும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் நல்ல விதத்தில் வந்துசேரும். சமூக பிரச்சினைகளில் சில சர்ச்சைகள் ஏற்படினும் 6உ முதல் சமயோசித புத்தியால் சரிப்படுத்துதல் ஆகும். சகோதரருக்குச் சௌக்கியபலன் தரும். டாம்பீகமாக அல்லது குடும்பபெருமைக்குரிய தான வைராக்கிய செலவினங்கள் ஏற்படும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 10உ 3 நாழிகை 53 விஞடி முதல் 12உ 10 நாழிகை 8 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். அவசிய மானதாக செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஓர் ஸ்தல யாத்திரை சென்றுவருதல் ஆகும். விவசாயத்தில் நற்பலன் வரும், வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும்; செய் தொழிலில் முதலீடு ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 12உ 10 நாழிகை 8 விஞடி முதல் 14உ 18 நாழிகை 53 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் நான்குவிதங்களில்வரும். சகோதர

ருக்கு நல்லன ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்படும். பூமியில் இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். புரட்டாசிமீ 14உ 18 நாழிகை 56 விஞடி முதல் 16உ 32 நாழிகை 10 விஞடி வரையில் சந்திராஷ்டமம். 24, 25 தேதிகளில் அவசியமானவற்றில் செலவு ஆகும். சனி ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர் ராசி 9பாதங்களும் நற்பலன்தரும். குடும்பாபிவிருத்தியில் மதிப்பாக பணவருமானம் வரும் சகோதரருக்கு முன்னேற்ற ஸ்திதி ஏற்படும். அவர்களின் விசுவாசம் மேலிடுதல் ஆகும். இயந்திர வாகன பிராப்தியில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும் வித்துவத்தில் மேடை கீர்த்தியும் ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். புரட்டாசிமீ 16உ 32 நாழிகை 10 விஞடி முதல் 1?உ 51 நாழிகை 15விஞடி வரையில் சந்திராஷ்டமம். 27, 28 தே?களில் முக்கியமானவற்றில் செலவு ஆகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகர ராசியில் 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தானுதி சௌகரியங்களில் படிப்படியாக உயர்வளித்துக் கொண்டிருக்கும். சகோதரருக்கு நல்லன ஏற்படும் 15உ க்கு மேல் வித்தையில் மதிநுட்பகாரியங்களில் சிலாக்கிய பலன் உண்டாகும். பூமி பாக்கியம்தரும். தாரபுத்திரர்களில் சௌக்கியம் நன்ருக இருந்து வரும் புரட்டாசிமீ 2, 3, 30தேதிகளில் அவசியசெலவுகள் ஏற்படும். 18உ 51 நாழிகை 15 விஞடி முதல் 21உ 16 நாழிகை 25 விஞடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்ப ராசி 9பாதங்களும் சுமார்பலனுக நடந்துவரும். குடும்பாபி விருத்தியில்தனவரவுகள் திருப்தியளிக்கும். சகோதரருக்கு ஓர்விபத்து ஏற்பட்டு தப்பும். வீடு வாகனங்களின் சௌகரியம் சாதாரணமாக

இருந்து வரும். எல்லாக் காரியங்களும் சமயோசிதபுத்தியினால் செயல் பட்டுக் கொண்டிருக்கும். புரட்டாசி மாதம் 4.5 தேதிகளில் அவசிய மான செலவினங்கள் ஏற்படும் 21உ 16 நாழிகை 24 விநாடி முதல் 23உ 45நாழிகை 13விநாடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி ¼- உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் மாத முன் பகுதியைவிட பின் பகுதியில் பணம் வெகுவாக வரும். சகோதரர் மிச்சிரமாக காட்சியளிப்பர். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் 13 உ முதல் சிலாக்கிய பலன் வந்துகொண்டிருக்கும். ஓர் ஒப்பந்த பணியைத் துவங்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். புரட்டாசிமீ 6, 7 தேதிகளில் மிக அவசிய செலவைச் செய்யும். 24, 25 தேதிகளில் சந்திராஷ்டமம் ஞாயிறு திங்கள் சுபமாகும்.

(474 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் சுவாமி திருக்கோயிலில், சந்தானகுரவருள் மூன்றாமவராகிய ஸ்ரீமறைஞானசம்பந்தர் குருபூஜை விழா 10—9—80 புதனன்று சிறப்பாக நடைபெற்றது. சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. மாலை 7-மணியளவில், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் 'மறைஞானசம்பந்தர்' என்ற தலைப்பிலும், வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் 'வினாவெண்பா' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்.

அன்று சிதம்பரம் திருக்களாஞ்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள மறைஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயத்திலும் ஸ்ரீ மறைஞானசம்பந்தருக்குத் தருமையாதீனத்தின் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சிறப்பு வழிபாடுகளும் நிகழ்வுற்றன.

உ

சிவமயம்

புரட்டாசிமாதச் சிறப்பு நாட்கள்

19—9—80 வெள்ளி, குருப்பெயர்ச்சி 9-57. (காலை 10 மணி அளவில்.)

20—9—80 சனி. ஏனாதிநாத நாயனார் குருபூஜை. தருமையாதீனம் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

22—9—80 திங்கள், பிரதோஷம். நரசிங்கமுனையரையர் குருபூஜை.

23—9—80 செவ்வாய், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்

24—9—80 புதன், பௌர்ணமி விரத பூஜை. நிறைபணி. மாதபூஜையில் அபூபம் சாத்துதல். தருமபுரம், வேளூர், சீகாழி. திருக்கடவூர், திருபுவனம், திருவையாறு, திருவாரூர் முதலிய திருத்தலங்களில் நிறைபணி.

25—9—80 வியாழன், மஹாளயபக்ஷாரம்பம்.

26—9—80 வெள்ளி, உருத்திரபசுபதி நாயனார் குருபூஜை.

28—9—80 ஞாயிறு, வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம்.

29—9—80 திங்கள், திருநாளைப்போவார் நாயனார் குருபூஜை.

1—10—80 புதன். காளாஷ்டமி.

4—10—80 சனி, ஆயில்ய விழா.

5—10—80 ஞாயிறு, இன்றுமுதல் வேளூர், திருக்கடவூர் மூன்றுதினம் சூரியபூஜை. சன்யஸ்த மஹாளயம்.

6—10—80 திங்கள், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் குருபூஜை. கலியுகாதி. பிரதோஷம்

7—10—80 செவ்வாய், மாதசிவராத்திரி, கிருஷ்ணாங்காரக சதுர்த்தசி. வேளூர் கேதாரவிரதபூர்த்தி. தருமையாதீனமடாலயத்தில் கேதார விரத பூஜை.

8—10—80 புதன், மகாளய அமாவாசை.

9—10—80 வியாழன், தருமையாதீனம் ஸ்ரீ மகாலட்சுமிதுர்க்கா தேவிக்கு நவராத்திரி உற்சவ சதசண்டிஹோம பூர்வாங்கம்.

10-10—80 வெள்ளி, சகல தேவாலயங்களிலும் நவராத்திரி பூஜை ஆரம்பம். தருமையாதீனத்தில் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கா தேவி சந்நிதியில் சதசண்டியக்ஞாரம்பம். வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு ஆகிய தலங்களில் நவராத்திரி ஒன்பது நாட்களிலும் ஸ்ரீ அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை நடைபெறும்.

14-10—80 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை.

15-10—80 புதன், தருமையாதீனம் ஸ்ரீ துர்க்காம்பிகா சந்நிதியில் மாலை வில்வவிருக்ஷாபிமந்திரணம்.

16-10—80 வியாழன், காலை நவபத்திரிகாகிரஹணம்.

குருபெயர்ச்சி

நிகழும் ரௌத்திரி ஆண்டு புரட்டாசித் திங்கள் 3 - ஆம் நாள் (19-9-80) வெள்ளிக்கிழமை உதயாதிநாழிகை 9-57 க்கு (காலை 10 மணி அளவில்) குருபகவான் சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசிக்கு எழுந்தருள்கிறார்.

குரு இயற்கையிலே தனிச் சிறப்புவாய்ந்த சுபக்கிரகம். சாத்விககுணம் உடையது. காலபுருஷனுடைய அறிவாகக் கூறப்படுவது. நுண்ணறிவு, செல்வம், உடல்வளர்ச்சி, மகப்பேறு இவைகளை அடைவதற்குக் காரணமாவது. ஜாதகத்தில் இக்கிரகத்தின் நிலையைக்கொண்டுதான், இப்பலன்களை நிர்ணயிக்கவேண்டும். குரு நல்ல நிலையில் ஜாதகத்தில் அமையுமானல் அந்த ஜாதகக்காரருக்கு நன்மைஉண்டாகும். தனுசும் மீனமும் இக்கிரகத்துக்குச் சொந்தவீடாகும். ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம் இந்த ராசிகள் நட்புவீடாகும். கடகம் உச்ச வீடாகும். மகரம் நீசவீடாகும். மேஷம், விருச்சிகம் பகை வீடாகும்.

குருபெயர்ச்சியன்று குரு தனது நட்புவீடாகிய கன்னியா ராசிக்கு எழுந்தருள்வதால் சுபக்கிரகம் வலுவடைந்து உலகிற்குப் பல நன்மைகளை அளிக்கும். பெரும்பாலும் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வோராண்டு இக்கிரகம் சஞ்சரிக்கும் ஆதலால் கன்னியாராசியில் சஞ்சரிக்கும் காலம்வரை நாட்டில் தர்மகாரியங்கள் மேலும் சிறப்பாக நிகழும். அறநிலையங்களுக்கு வலிமை ஏற்படும். அமைதியும், சுபிட்சமும் உண்டாகும். பருவமழை நன்ருகப் பெய்து வளம் கொழிக்கும். நல்லகாரியங்களில் மக்களுக்கு ஈடுபாடு உண்டாகும்.

அவரவர்கள் ஜாதகத்தில் சந்திரனை முதலாகக்கொண்டு கணக்கிடும்போது கன்னியா ராசி 2, 5, 7, 9, 11 ஆவது இடமாக இருந்தால் அந்த ஜாதகக்காரருக்குத் திருமணம், மகப்பேறு, நோய்நீக்கம் ஆகிய நன்மைகள் ஏற்படும். 1, 3, 4, 6, 8, 10, 15, ஆவது இடமாக அமையுமானல் சில கஷ்டங்கள் உண்டாகலாம். அவர்கள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டுக் கஷ்டங்களிலிருந்து விலகவேண்டும்.

குரு ஞானகாரகன், இறைவன் குருவடிவில் ஞானோபதேசம் செய்பவர் ஆதலின் குருவடிவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை அவரவர்கள் சக்திக்கு ஏற்றவாறு திருவிளக்குஏற்றுதல், வலம்வருதல், அபிஷேக ஆராதனைகள் செய்தல் முதலியவற்றுல் வழிபடுதல் சிறந்தது. நவதானியங்களுள் கொண்டைக்கடலை குருவுக்குப் பிரீதியாதலின் நிவேதனப்பொருள்களில் கடலைசுண்டலைச் சேர்த்துக்கொள்வது நலம்தரும். குருபெயர்ச்சியால் நன்மைபெறும் ஜாதகர்கள் வழிபாடுசெய்வதால் மேலும் பல நன்மைகள் அடைவர். ஏனையோர் வழிபாடு செய்வதால் தீமை அகன்று நன்மைகள் பெறுவர்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press- Dharmapuram Mayuram 10—9—80